# அறிஞர் அஸீஸ்
# அகம் நிறை காவியம்



காப்பியக் கதிரோன் முனைவர் முகைதீன் அனஸ்

வெளியீடு: கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் பவுண்டேஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிஞர் அஸீஸ்
# அகம் நிறை காவியம்

காப்பியக் கதிரோன் முனைவர் முகைதீன் அனஸ்

வெளியீடு: கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் பவுண்டேஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : அறிஞர் அஸீஸ் அகம் நிறை காவியம்
(காவியம்)
பக்கம் : 80+
மொழி : தமிழ்
முதல் பதிப்பு : 2024
ISBN - : ISBN - 978-955-7931-04-3
பிரதிகள். : 500

நூலாசிரியர் : காப்பியக் கதிரோன் முனைவர் முகைதீன் அனஸ்

பதிப்புரிமை : கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் பவுண்டேஷன்

வெளியீடு - : 17.02.2024

அச்சகம் :இமேஜ் ப்ளஸ்
இல 29/1,
மடவளை பஸார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகவுரை

மானுட சமூகத்தில் உன்னதமானவர்களையும் உயர்ந்தவர்களையும் தமிழ் இலக்கிய வடிவத்தில் காவியமாக வடித்து வரும் என் பணிகளில் இன்று அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்களைக் காவியமாய் யாத்தளிப்பதில் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கை முஸ்லிம் சமூகத்தின் கல்வி, அரசியல், சமூகப் பொருளாதாரம், இலக்கியம் போன்ற பல்வேறு துறைகளின் மேம்பாட்டுக்காகவும் அதிகம் உழைத்த இவரின் தியாகங்களை நினைக்கும்போதெல்லாம் அவரைப் பற்றிய மதிப்பும் மரியாதையும் என்னுள் அதிகம் பெருக்கெடுத்தோடிக்கொண்டிருக்கிறது. இப்படியும் ஓர் மனிதர் இந்நாட்டில் முஸ்லிம் சமூகத்தின் உயர்ச்சிக்குப் பணி புரிந்தாரா? என்ற பிரமிப்பு எனக்கு ஏற்படுகின்றது.

காலத்தால் அழியாத கீர்த்திக்கு உரியோராய் ஆகிவிட்ட சமூகப் பெரியார் ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்களைப் பற்றிக் காவியம் படைப்பதால் என் எழுத்துப்பணி ஏற்றமுறுகின்றது. அவரைப் பற்றிய என் எழுத்துக்கு அவை அணியாகவே அமைகின்றது.

அறிஞர் அஸீஸ் அகம்நிறை காவியத்தின் ஊடாக என் காவியப்பணி உயர்ச்சியுறுகின்றது. அறிஞர் அஸீஸ் எனும் மாமனிதனின் சமூகப் பணிகள் இந்நாட்டில் முஸ்லிம் சமூகத்திற்கு மாபெரும் போதனையாகவும் நெறிகாட்டியாகவும் திகழும் என்ற உறுதியான நம்பிக்கை என்னில் ஊற்றெடுத்தோடுகின்றது. அவரைப்போல எதிர்காலத்தில் பலநூறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸீஸ்கள் உருவாகுவதற்கு இக்காவியம் ஆசையையும் ஆர்வத்தையும் தூண்டும் உந்துசக்தியாக அமையும் என்றும் நம்புகின்றேன்.

மகத்தான மனிதர்களுள் முக்கிய மூலவராக மிளிர்கின்ற அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்கள் இந்நாட்டில் தமிழ் இலக்கிய மேம்பாட்டுக்காக ஆற்றிய பங்களிப்புகளும் மிக உயரியதாகும். அந்த வகையில் இன்று இங்கு அவரையே ஓர் இலக்கியமாக்கிக் காவியமாகப் படைக்கக் கிடைத்தமையை இட்டுப் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

மேலும் கலாநிதி. அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்களைப் பற்றிய இக்காவிய நூலை எழுதுவதற்கு என்னைத் தூண்டிய ஏந்தலர், அஸீஸூம் தமிழும் என்ற வரலாற்று நூலை எழுதிய ஆசிரியர், வரலாற்று ஆய்வாளர், முன்னாள் தமிழ் அலுவல்கள் உதவிப் பணிப்பாளர், அத்தியவசிய சேவைகள் உதவி ஆணையாளர், புனர்வாழ்வுப் பணிப்பாளர் நாயகம் போன்ற பெரும் பதவிகளை அலங்கரித்தவருமான என் மரியாதைக்குரிய பெரியார் ஏ.எம். நஹியா அவர்களுக்கும் என் உயரிய நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

அதேபோல் எனது இக்காவிய நூலை மிகவும் சிரத்தையுடன் ஆய்ந்து பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கி எழுத்துப் பிழைகள், கருத்துப் பிழைகள், காவிய அமைப்புக்கள் பற்றி எல்லாம் சுட்டிக்காட்டி ஆலோசனை நல்கிய தமிழ் பேரறிஞர், பேராசிரியர். எம்.ஏ.எம். நுஹ்மான் அவர்களுக்கும் என் மனப்பூர்வமான நன்றிகளை சொரிகின்றேன். அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கிய இந்நூலுக்கான அணிந்துரையையும் அகம்நிறைத்து வாழ்த்துகின்றேன்.

மேலும் ''அஸீஸ் அகம்நிறை காவியம்'' எனும் எனது இந்நூல் வெளிவருவதற்குப் பல்வேறு உந்துசக்தியாகவும் உதவி யாளர்களாகவும் இருந்த அகில இலங்கை வை.எம்.எம்.ஏ இயக்கத்தின் முன்னாள் தேசியத் தலைவர்களாக இருந்த எம்.எஸ் றகீம் (யாழ்நகர்) அவர்களுக்கும் சஹீட் எம். ரிஸ்மி (கண்டி) அவர்களுக்கும் அறிஞர் அஸீஸ் அவர்களின் புதல்வாரன அலி அஸீஸ் அவர்களுக்கும் என் உயரிய நன்றிகளை உரித்தாக்குகின்றேன். அதேபோல் இந்நூலை வெளியீடு செய்த அஸீஸ் பவுண்டேசனுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், இந்நூலை மிகவும் நேர்த்தியாகத் தட்டச்சு செய்த முஷ்பிக் முபாரக் அவர்களுக்கும் பதிப்பித்த மடவளை Image Plus அச்சகத்தாருக்கும் என் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றி.

**மட்டக்களப்பு வீதி,**

**காப்பியக் கதிரோன்**

**பெரியபாலம்,**

**முனைவர். முகைதீன் அனஸ்.**

**மூதூர் - 05**

**28.01.2024**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிஞர் அஸீஸின் பணிகளைப் போற்றும் கவிஞர் அனஸின் அகம்நிறை காவியம்

கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸ் (1911 – 1973) அவர்கள் கடந்த நூற்றாண்டில் இலங்கை முஸ்லிம் சமுகத்தை நவீத்துவப் பாதையில் வழிநடத்திய முக்கியமான ஆளுமை.

1933ஆம் ஆண்டில், இலங்கைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறையில் பட்டம் பெற்ற இவர், இளம் வயதிலேயே இலங்கை சிவில் சேவையில் இணைந்து 13 ஆண்டுகள் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் அரச உயர் நிருவாகப் பதவிகளை ஏற்று மக்கள் பணியாற்றியவர். டி.பி. ஜாயாவின் வேண்டு கோளுக்கிணங்க முஸ்லிம்களின் கல்வி முன்னேற்றத்துக்காகத் தனது உயர் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு கொழும்பு சாஹிறாக் கல்லூரியில் அதிபர் பதவியை ஏற்றுச் செயற்பட்டவர். ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பதவியில் இருந்த அஸீஸ் சாஹிறாக் கல்லூரியை இந்நாட்டின் முன்னணிக் கல்லூரி களுள் ஒன்றாக உருவாக்கினார். அவர் காலத்தில் அங்கு பயின்ற பல இளைஞர்கள் பிற்காலத்தில் கல்விமான்க ளாகவும் உயர் அதிகாரிகளாகவும் உருவாகினர்.

1952ல் அவர் செனட் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். செனட் சபையில் அவர் ஆற்றிய உரைகள் இந்நாட்டினதும் இந்நாட்டு மக்களதும் முன்னேற்றத்தில் அவருக்கிருந்த அக்கறையைக் காட்டுவன. இன மத வரம்புகளைக் கடந்த அவரது சேவை இந்நாட்டு மக்கள் அனைவராலும் மதிக்கப்பட்டது.

பின்தங்கிய நிலையில் இருந்த முஸ்லிம் சமுகம் முன்னேறுவதற்குரிய ஒரே கருவி நவீன கல்வியே என அஸீஸ் உறுதியாக நம்பினார். 1940களிலிருந்து அதில் அவர் அக்கறையுடன் செயற்பட்டார். 1945ல் அவர் உருவாக்கிய முஸ்லிம் கல்விச் சகாயநிதி பல்லாயிரக் கணக்கான வசதியற்ற முஸ்லிம் மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் கல்வி பெறுவதற்கு இன்றுவரை உதவிவருகின்றது.

முஸ்லிம் சமுகம் முன்னேற வேண்டுமானால் மார்க்கக் கல்வியிலும் நவீன கல்வியிலும் தேர்ச்சிபெற்றவர்களே அதற்குத் தலைமை தாங்கவேண்டும் என அவர் கருதினார். அத்தகைய ஒரு நவீன உயர்கல்வி நிறுவனத்தின் தேவை பற்றி 1940களின் தொடக்கத்திலேயே அவர் எழுதினார். அவரது சிந்தனையின் விளைவாகவே ஜாமியா நழீமியா 1970களில் உதயமாயிற்று.

முஸ்லிம்களின் தாய்மொழி தமிழ் என்பதிலும், முஸ்லிம்களின் கல்வி மொழி தமிழாக இருக்க வேண்டும் என்பதிலும் அவர் உறுதியாக இருந்தார். இது தொடர்பாக 1942ல் இருந்து சுமார் முப்பது ஆண்டுகள் அவர் தொடர்ச்சியாக எழுதிவந்தார்.

அஸீஸ் அவர்கள் ஒரு விமர்சனச் சிந்தனையாளராக (critical thinker) விளங்கினார் இலங்கை முஸ்லிம்களின் சிந்தனைப்போக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கியவர்களில் அவர் முக்கியமானவர். அறிஞர் சித்திலெப்பைக்குப் பின்பு முஸ்லிம் சமூகத்தில் அறிவுரீதியாகச் செல்வாக்குச் செலுத்திய முக்கியமான அறிவாளியாக அவரையே சொல்ல வேண்டும். தன்னுடைய சிந்தனையிலும், செயற்பாட்டிலும் தனது காலத்து ஏனைய முஸ்லிம் தலைவர்களைவிட நவீன அணுகுமுறையை அவர் கொண்டிருந்தார். பாரம்பரியத்தையும் நவீனத்துவத்தையும் ஒன்றிணைக்க அவர் ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொண்டார். அவர் சிந்தனையில் உதித்த ஜாமியா இதில் எவ்வளவுதூரம் வெற்றிபெற்றுள்ளது என்பது ஆய்வுக்குரியது. அதன் பயன் காணும் முன்பே அவர் இவ்வுலகை நீத்துவிட்டார்.

நவீன இலங்கையில், "முஸ்லிம்" "முவர்ஸ் (Moors) அல்லது சோனகர்" என்ற அடையாளம் பற்றிய விவகாரத்திலும் அஸீஸ் தெளிவாக இருந்தார். தன்னுடைய ஆரம்ப கால எழுத்துகளில் "சோனகர்" என்ற பதத்தையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் உபயோகித்துள்ளார். எனினும், பின்னர் அவர் அதைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொண்டார். முவர்ஸ் என்பது காலனித்துவ ஆட்சியாளர்களான போத்துக் கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோர் இலங்கை முஸ்லிம்களை அடையாளப் படுத்தப் பயன்படுத்திய சொல்லாகும். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இது அதிகமாகப் பயன்படு த்தப்பட்டது. கொழும்பு வாழ் மேல்தட்டு முஸ்லிம்கள், தம்மை இந்திய முஸ்லிம்கள் மற்றும் மலாயர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக "முவர்ஸ் அல்லது சோனகர்" என்ற பதத்தையே தொடர்ந்தும் உபயோகித்து வந்தார்கள். இதற்கு எதிராக, முஸ்லிம் என்ற அடையாளத்தை முன்னெடுத்த ஒரு குழுவினரும் இருந்தனர். அஸீஸ் முஸ்லிம் அடையாளத்தையே ஆதரித்தார். 1944ஆம் ஆண்டில் "இலங்கை முஸ்லிம் யூனியன்" எனும் பெயரில் ஓர் அமைப்பை நிறுவி, அதன் ஸ்தாபகத் தலைவராக ஆற்றிய உரையில், "சோனகர்" என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதம் இனவாதத்தைத் தோற்றுவிக்கின்றது என்பதால், மத அடிப்படையிலான "முஸ்லிம்" என்பதை உபயோகித்தல் நன்மை பயக்கும் என்ற கருத்தை முன்வைத்தார். சுதந்திரத்துக்குப்பின், முஸ்லிம்களிடையே "சோனகர்" என்ற அடையாளம் படிப்படியாக மறைந்துவிட்டது. தற்போது இந்தப் பதம் சில அரச ஆவணங்களில் மட்டுமே உபயோகிக்கப் படுகின்றது.

கலாநிதி அஸீஸ் ஒரு சிந்தனையாளர் மட்டு மல்ல ஒரு சிறந்த எழுத்தாளரும் ஆய்வாளரு மாவார் என்பதை அவரது நூல்களும் கட்டுரைகளும் நமக்கு உணர்த்துகின்றன. 1973 நவம்பர் 23ஆம் திகதி காலஞ்சென்ற அஸீஸ் அவர்களை, 1980ம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கௌரவ இலக்கியக் கலாநிதிப்பட்டம் வழங்கி கௌரவித்தது.

கலாநிதி அஸீஸ் அவர்கள் 1940களின் தொடக்கத்திலிருந்து தான் மரணிக்கும்வரை மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் சமுகத்திற்கு ஒரு உறுதியான ஆய்வறிவுத் தலைமைத்துவத்தை வழங்கியவர். அவர் மரணித்த போதிலும் அவரது சிந்தனைகளும், வழிகாட்டுதல்களும் இன்றும் நம்முடன் உள்ளன. அவர் மறைந்து அரைநூற்றாண்டுகாலம் ஆகிய பின்னரும் அவர் இன்றும் நினைவுகூரப்படுகிறார். அவர் இன்றுபோல் இன்னும் நீண்ட காலம் நினைவுகூரப்படுவார் என்பதில் ஐயம் இல்லை. அஸீஸ் அவர்களின் மறைவின்பின் அவரது வாழ்வும் பணிகளும் பற்றிப் பல்வேறு அறிஞர்களும் ஆய்வாளர்களும் தொடர்ச்சியாக எழுதிவந்துள்ளனர். அஸீஸ் ஃபௌண்டேசன் அவருடைய நூல்களையும், அவர்பற்றிய நூல்களையும் வெளியிட்டுவருகின்றது. ஆண்டுதோறும் அவர் பற்றிய நினைவுச் சொற்பொழிவுகளை ஏற்பாடுசெய்து வருகின்றது. அவருடைய சிந்தனைகள் இன்றும் நமக்கு ஏற்றதாகவும் பயனுடையதாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதனால் அவர்பற்றித் தொடர்ந்து சிந்திப் பதும் எழுதுவதும் அவசியமாகும்.

அந்த வகையில் புதிதாக வெளிவரும் ஒரு நூலே *அறிஞர் அஸீஸ் அகம்நிறை காவியம்*. இந்நூலை எழுதிய கவிஞர் எம். ஏ. எம். அனஸ் மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மரபுரீதியான செய்யுள் எழுதுவதில் ஆற்றல் உடையவர். இதற்கு முன்னர் பல்வேறு அறிஞர் பெருமக்களைப் பற்றி, அவர்களின் வாழ்வும், பணிகளும் பற்றி பத்துக்கும் அதிகமான காவியங்களை இவர் எழுதி வெளியிட்டுள்ளார்.

காவியம் அல்லது காப்பியம் என்ற சொல் பொதுவாக செய்யுளில் கதைகூறும் ஒரு புனைவு இலக்கிய வடிவத்தைக் குறிக்கும். அனஸ் அவர்களின் காவியங்கள் அத்தகைய புனைவு இலக்கியங்கள் அல்ல. உயிர் வாழும் அல்லது வாழ்ந்து மறைந்த அறிஞர் பெருமக்களின் வாழ்வையும் பணிகளையும் செய்யுள் நடையில் விபரித்துப் போற்றிப் பாடும் ஒரு நெடும்பா வடிவமாகும். இதில் கற்பனைகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனைவுகளுக்கும் இடம் இல்லை. அவ்வகையில் இதனைச் செய்யுளில் எழுதப்படும் வாழ்க்கை வரலாறு எனலாம். ஆனால், இது முற்றிலும் வாழ்க்கை வரலாறும் அல்ல. அஸீஸின் வாழ்க்கைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு செய்யுள் புகழாரம் எனலாம்.

இன்றைய நவீன யுகத்தில் செய்யுள் பெரிது வழக்கிறந்துவிட்டது. இது வசனயுகம் என்று சொல்கிறார்கள். இன்று செய்யுள் ஆற்றல் உடையவர்கள் அருகிவிட்டார்கள். இளந்தலைமுறையினர் செய்யுளை விரும்பி வாசிப்பதும் அருகிவிட்டது கவிதை எழுதுவதற்கும் இன்று பொதுவாக வசனமே பயன்படுத்தப் படுகின்றது. அதைப் புதுக்கவிதை என்று அழைக்கிறார்கள். பாரம்பரியத்திலும் மரபிலும் ஊறித்திளைத்த மிகச் சிலர்தான் இன்று அக்கறையோடு செய்யுள் எழுதுகிறார்கள். கவிஞர் அனஸ் அவர்களுள் ஒருவர். அவ்வகையில் அவர் நமது பாராட்டுக்கு உரியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முழு நூலையும் 337 நூற்பாக்களால் அமைத்துள்ளார் கவிஞர். அவற்றுள் ஒரு பகுதி (245 – 328) புதுக்கவிதை வடிவிலும் உள்ளது. மரபுக்கவிதை புதுக்கவிதை இரண்டிலும் கவிஞர் அனஸ் பயிற்சி உள்ளவர் என்பதை இது காட்டுகின்றது.

நமது நாட்டின் உயர்ச்சிக்காகவும், முஸ்லீம் சமூகத்தின் முன்னேற்றத்துக்காகவும் இறுதிவரை அயராது உழைத்த அறிஞர் அஸீஸ் அவர்கள் மீது புகழாரம் சூட்டி அவரைக் கௌரவித்த கவிஞர் அனஸ் அவர்களுக்கு எனது வாழ்த்துகளும் பாராட்டுகளும்.

**Dr. எம். ஏ. நுஃமான்**

ஹீரஸ்ஸகல, கண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிஞர் அஸீஸ் - அகம்நிறை காவியம்.

## (எண்சீர்)

1. நல்லுயர்வில் முஸ்லிம்கள் நாட்டினிலே வாழ
நல்வழியாய் ஏ.எம்.ஏ அஸீஸவரும் ஆனார்.
சொல்வதனால் இன்னதனைச் சமூகமது மேலும்
சீர்மையுறும் என்பதையும் சிந்தையிலே கொள்வோம்.

2. உன்னதமாம் பணிசெய்து உயர்ச்சிதனைச் சமூகம்
உரித்தாகப் பெறுவதற்கு உரியவழி என்று
நன்றான ஏ.எம்.ஏ. அஸீஸ்அவரை நவிலின்
நம்இனத்தின் உயர்ச்சிக்கு நன்நெறியாய் ஆகும்.

3. இன்னரிய இவர்பற்றி இயம்புவது எங்கள்
இனத்தினது உயர்ச்சிக்கு இனியநெறி காட்டும்.
என்பதனால் அஸீஸ்அவரின் ஏற்றமதை எல்லாம்
எழிலான காவியமாய் எடுத்தியம்ப முயன்றேன்.

4. ஆற்றல்களின் அமைவிடமாய் ஆகிட்ட அஸீஸ்
அன்னவரின் அரும்பணியை அறைகின்ற போதில்
ஏற்றத்தை இனத்திற்கு ஏராளம் நல்கும்
என்பதனால் அவர்பற்றி எடுத்துரைக்க முயன்றேன்.

5. ஆதலினால் அவருடைய அருமைமிகு வாழ்வை
அறைந்திடுதல் இனத்திற்கு அரும்பயனாய் ஆகும்.
போதனையும் நல்கிஇவை பெரிதுதவி புரியும்
பாவாகப் பகன்றிடுதல் பயன்ஆகும் என்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. அறிஞரவர் ஏ.எம்.ஏ. அஸீஸ்வாழ்வு பற்றி
அழகுநிறை காவியத்தை ஆக்கிடவே முயன்றேன்.
நிறைவான காவியமாய் நிலமீதில் ஈது
நின்றிலங்க நாயகனே! நல்லுதவி புரிவாய்!

7. காவியமாய் அஸீஸவரைக் கவினுறவே பாட
கருணைமிகு இறையோனே! கடல்போன்று தமிழை
தாவியெந்தன் உள்ளத்தில் தரித்திடவே செய்வாய்
திறமான காவியமாய்த் திகழ்ந்திடவும் அருள்வாய்.

8. உன்னதமாம் அஸீஸவரை உரைக்கின்ற கவியில்
உருவாகும் பிழையின்றி உயர்வுற்றுத் திகழ
மன்னவனே! இறையோனே! மாபணியாம் ஈது
மாண்பாக மிளிர்வதற்கு மாகாப்பாய் ஆவாய்!

9. மனிதர்தம் முயற்சிக்கு மாபெரிய சான்றாய்
மாண்பாக யாழ்ப்பாணம் மிளிர்வதுவும் பாரீர்
இனிதான கனிவகையும் இன்னும்பல் பயிரும்
இதமான விளைவுதரும் இடமேதான் ஈது.

10. பனைவளத்தின் காரணமாயப் பெரும்செல்வம் ஈட்டும்
பாங்கான ஊர்என்றும் பரிமாணம் நல்கும்
இணையற்ற செல்வமென இன்னரிய கல்வி
இவ்வூரின் உடமையென இனிதுறவே திகழும்.

22

11. கடல்வளத்தின் காரணமாய்க் கடும்செல்வம் விஞ்சிக்
காட்சிதரும் யாழ்நகரோ கவினோங்கித் திகழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கதனின் தலைநகராய் வரம்பெற்ற இவ்வூர்
வளம்மிக்க ஊரெனவும் விளங்கிடுவோம் நன்கு.

12. அருமைமிகு முகைதீன்நாச் சியாஅன்னை யாக
அபூபக்கர் முகம்மத்இவர் அன்பின்தந் தையாக
பெருமையுற அஸீஸவரும் புவிபிறந்தார் அம்மா!
பேருவகை இனமடையப் பாதையுமே ஆனார்.

13. ஆயிரத்தித் தொழாயிரத்திப் பதின்ஒன்றாம் ஆண்டு
ஐப்பசியின் நாலாம்நாள் ஆனபெரும் தினத்தில்
தாயவரின் வயிற்றிருந்து தரைத்தலமே உதித்தார்.
தனதான சமூகத்தைத் தாங்கிடவே அஸீஸார்.

14. அரும்பதியே என்றபெரும் ஆனபெரும் சிறப்பை
அடைந்திட்ட யாழ்நகரின் அமைவண்ணார் பண்ணை
பெருமாந்தர் அஸீஸ்பிறந்த பூமியென ஆகி
பெருமையுற்றுத் திகழ்கின்ற பாங்கதுவும் பாரீர்.

15. அன்றஸீஸின் பெற்றோர்கள் அழகின்யாழ் நகரில்
அமைவுற்ற சோனகத்தெரு முகையத்தீன் பள்ளி
என்றான வீதியிடம் ஏற்றமுற வசித்தார்.
ஏற்றபெரும் முகவரியின் ஏந்தலரும் ஆவார்.

16. ஆரம்பக் கல்விதனை அஸீஸவரும் அன்று
அரசாங்க முஸ்லிம்தமிழ் ஆனதமிழ்க் கலவன்
பேரான பள்ளியிலே பயின்றிட்டார் இதனை
பெயராக அல்லாப்பிச்(சை) பள்ளியென்றும் அழைப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. மூன்றாண்டாய் பள்ளியிதில் முறையாகக் கற்றார்.
மேலான மார்க்கத்துக் கல்வியிலும் தேர்ந்தார்.
தேன்மறையாம் குர்ஆனும் திறனாக ஓதும்
தேர்ச்சியதும் பெற்றவராய்த் தான்இங்கே திகழ்ந்தார்.

18. தன்னுடைய மூன்றாண்டுக் கல்விதனை முடித்து
தன்மூன்று முதல்ஐந்தாம் தரம்வரையும் ஆங்கே
நன்றெனவே வண்ணார்பண்(ணை) வைத்திஸ்வரா என்னும்
நாமமிகு பள்ளியிலே நாட்டமுடன் கற்றார்.

19. ஆறாம்தரம் அதுமுதலாய் அவர்உயர்தரம் வரைக்கும்
அழகுறவே யாழ்இந்து ஆனதாம்கல் லூரியில்
சீராகக் கற்றிட்ட சரிதையதும் கொண்டார்
சென்றிட்டார் பல்கலைக்கழ(கம்) இங்கிருந்து தானே!

20. இந்துக்கல் லூரியாழ்நகர் இன்னதனில் அன்று
இணைந்திட்ட முதல்முஸ்லிம் மாணவரே என்ற
விந்தைமிகு வரலாற்றில் விளங்குகிறார் அஸீஸும்
வளமான உண்மையிதை விளங்கிடுவீர் நன்கு.

21. ஆறாண்டு காலமிவர் அழகுறவே இங்கு
அருங்கல்வி கற்றிட்ட அரும்பேறும் பெற்றார்.
சீராகக் கல்வியிலே சிந்தையுமே கொண்ட
சிறப்பான சரிதையிலே சங்கமமும் ஆனார்.

22. கல்விப்பொதுத் தரத்தினது சாதாரணப் பரீட்சையில்
கரிசனையாய்ப் படித்ததனால் இந்துசமயப் பாடமும்
நல்முறையில் விசேடசித்தி அடைந்திட்ட ஆளாய்
நிலைபெற்றார் அஸீஸவரும் நினைக்கையிலும் வியப்பே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. இந்துக்கல் லூரியாழ்நகர் இன்னதிலே இருந்து
இனிதுறவே பல்கலைக்கழ கக்கல்வியைத் தொடர
வந்தபெரும் வாய்ப்பதனை வரமெனவே கொண்டார்.
வாஞ்சையுடன் கல்விக்காய் விளைந்திட்டார் நன்கு!

24. கொழும்புப்பல் கலைக்கழகம் கல்விதனைத் தொடர்ந்து
கற்பதற்குக் கிடைத்திட்ட கவின்இடமாம் புரிவீர்.
அழகுறவே வரலாற்றுத் துறைதனிலே சிறப்பு
ஆனதொரு பட்டமதும் அடைந்திட்டார் அங்கு.

25. இதன்பின்னே கல்விதனை இனிதுறவே தொடர
இவர்கேம்பிரிஜ் பல்கலைக்கழ(கம்) சென்றிட்டார் தானே!
இதமாகக் கற்றுவரும் இத்தகைய பொழுதில்
இவர்முடிவு வேறுவிதம் இருந்ததுவே அம்மா!

26. இவ்வேளை அவர்முன்பு தோற்றியதாம் பரிட்சை
இலங்கைச்சிவில் சேவைதனில் இனிதுறவே தேர்ந்தார்.
அவ்வதனின் சேவைக்கு ஆவலது கொண்டு
அயல்நாடு விட்டேதான் ஆம்இலங்கை மீண்டார்.

27. சுங்கத்திணைக் களத்தினிலே சிறப்பாம்மேற் பார்வை
செய்யும்பத வியையவரும் ஏற்றேதான் செய்தார்.
பங்கமிலா முறையினிலே பணியாற்றி நல்ல
புகழதனில் உச்சத்தில் பரிணமித்தும் திகழ்ந்தார்.

28. நல்லறத்து வாழ்வுக்காய் நகர்கொழும்பில் இவரும்
நங்கையராம் உம்முகுல்தூம் நாயகியை மணந்தார்.
சொல்லரிய சிறப்புக்குச் சொந்தமென இவரின்
சீவியமும் திகழ்ந்ததுவே செகமீதில் நன்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. இல்லறத்து இன்பமென இருஆண்கள் ஒருபெண்
இவர்பெற்ற பேறாக இலங்குகிறார் தானே!
நல்மைந்தர் அலிஅஸீஸும் இக்பால்அஸீஸ் உடனே
நற்புதல்வி மரினாஇஸ் மயிலுமேதான் ஆவர்.

30. இதன்பின்பு கல்முனைக்கு இடமாற்றம் பெற்று
இவர்அவசர காலஅரசாங்(க) அதிபரென ஆனார்.
பதவிதனைப் பாங்குடனே பேணிட்ட அஸீஸும்
புகழ்பூத்த பணிகள்பல புரிந்திட்டார் ஆங்கு.

31. பசுமையதன் புரட்சியது பரிணமித்துக் கிழக்கு
பசிபோக்கும் உணவினது பாசறையாய்த் திகழ
அஸீஸவரும் ஆற்றிட்ட அரும்பணிகள் நாட்டில்
ஆயிரமாம் ஆண்டின்பினும் அவர்பெயரைக் கூறும்.

32. தரிசுநிலம் எல்லாமும் தானியத்துப் பயிரால்
தான்நிறைந்து காட்சிதரத் தக்கபணி செய்தார்.
அரசாங்கக் காணிகளை ஆட்களுக்கு வழங்கி
அதனினிலே பயிர்விளைய அரும்பணிகள் புரிந்தார்.

33. குடும்பமுடன் வந்தேதான் கல்முனையில் அஸீஸும்
குடியாக வாழ்ந்ததையும் கவனத்தே கொள்வோம்.
கடுமையுடன் உழைப்பதற்காய்க் கடும்வாஞ்சை கொண்டு
கல்முனையில் குடியான காரணமும் புரிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. குளங்களுடன் வாய்க்காலும் கூடியதாய் அமைத்து
குறிப்பாக விவசாயம் குதூகலிக்கச் செய்தார்.
வளமான வாழ்வுடனே வருமானம் விஞ்சி
விவசாயம் உயர்ச்சியுற வழியமைத்துக் கொடுத்தார்.

35. கால்நடைகள் உற்பத்தி கல்முனையில் ஓங்க
காத்திரமாய்ப் பணியாற்றிக் களிப்பவரும் கண்டார்.
ஆல்போல செல்வமது அப்பதியில் ஓங்க
அயராது பணியாற்றி அகமகிழ்வில் திளைத்தார்.

36. உணவினது உற்பத்தியை உயரியதாய் ஆக்க
உருவான அவசரகா(ல) சிவில்அதிகா ரிஇவர்.
இணையற்ற சேவைகளால் இதைஇனிதே செய்தார்.
இதிகாசம் போற்றிடவே இனிதுயர்வு கண்டார்.

37. ஆயிரத்தித் தொழாயிரத்தி நாப்பத்தி இரண்டு
அதனுடனே நாப்பத்தி மூன்றுஎன ஈராண்டு
நேயமுடன் கல்முனையில் பணியாற்றி அஸீஸும்
நனிசிறந்த சேவைகளின் நாயகனாய்த் திகழ்ந்தார்.

38. விவசாயப் பயிற்சிநெறி விரிவாக வழங்கி
விவசாய விருத்திக்கு வித்திட்டார் ஆங்கே
நல்முறையில் விவசாயம் நன்றெனவே சிறக்க
நற்பணிகள் ஏராளம் நல்கிட்டார் அன்றோ!

39. விவசாயம் கால்நடைகள் விளைச்சலது ஓங்க
வகைவகையாம் உதவிகளை வழங்கிட்டார் நன்கு
அவராலே கல்முனையும் அடைந்திட்ட உயர்வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டாண்டாய் எம்நாடும் அறைந்திடுமே அழகே!

40. அறுவடையின் விழாவுடனே அன்னதன்கண் காட்சி
ஆனபெரும் நிகழ்வெல்லாம் அங்கெடுத்தே அவரும்
சிறப்புடனே விவசாயச் சீர்பணிகள் புரிந்தார்.
சரித்திரத்தில் இவர்சேவை சிறந்தோங்கும் அன்றோ!

41. முஸ்லிம்இன வரலாற்றில் அஸீஸ்இவரே நாட்டில்
முதலான சிவில்சேவை முன்னோடி ஆகும்.
அஸ்தமிக்கா வரலாறாய் அவர்நாமம் நாட்டில்
அழகுறவே வாழ்வதையும் அறிவோமே நன்கு.

42. விவசாய வருத்திக்கு வகைசெய்த இவரின்
வாஞ்சைமிகு விவசாய விழாவுக்கு அன்று
உவப்புடனே பிரதமராம் டீஎஸ்சேன நாயக்க
உயர்வருகை தந்திட்ட உன்னதமும் புரிவோம்.

43. கல்முனையில் முஸ்லிம்கல் விச்சங்கம் அமைத்துக்
கல்வியதன் உயர்ச்சிக்கும் காத்திரமாய் உழைத்தார்.
நல்லபெரும் பணியெல்லாம் நாட்டமுடன் செய்த
நாயகராம் அஸீஸவரை நெஞ்சத்தே நிறைப்போம்.

44. அவசரகா லக்கல்முனை அரசாங்க அதிபர்
ஆனபெரும் சிறப்பினையும் அடைந்தவராய் ஆனார்.
உவப்புடனே பணியாற்றி உயர்ச்சிதனில் நாடு
உள்ளாக வழிசெய்த உரிமையதும் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45. கல்முனையில் அரசாங்க அதிபர்என ஆன
காலத்தே இப்பகுதி மக்களுடன் நெருங்கி
அல்லோ!அவர் பழகுகிற அரும்வாய்ப்பும் பெற்றார்.
அகம்தன்னை மக்கள்பணி ஆற்றுவதில் நிறைத்தார்.

46. இக்காலப் பகுதியிலே தான்இவரும் கல்வியின்
இன்னரிய உயர்ச்சிதனை இதயத்தால் உணர்ந்தார்.
தக்கதொரு உயர்வினிலே சமூகமது திளைக்க
தகுவழியாய்க் கல்விதனைத் தான்புரிந்து கொண்டார்.

47. கிழக்கினது மக்கள்எலாம் அஸீஸ்துரையே என்று
கண்ணியமாய் அழைப்பதையும் காண்கின்றோம் இன்று
அழகான சேவை[illegible]ளை அவராற்றித் தானே
அதிகளவு மக்களினை அப்படியே கவர்ந்தார்.

48. கல்முனையில் பணிசெய்த காலத்தே அஸீஸும்
கல்வியலார் சுவாமிவிபுலா னந்தரினை அவரின்
நல்லரும்பதி காரைதீவிலும் கல்லடிசிவா னந்தா
நாமத்துப் பள்ளியிலும் சந்தித்து வந்தார்.

49. கல்முனையின் அவசரகால அதிகாரி யாகி
கனசேவை புரிந்திட்ட கண்ணியவான் அஸீஸார்.
நல்முறையில் இருவருட நிறைவுக்குப் பின்னே
நிலைதன்னில் மாற்றத்தைக் கண்டிட்டார் தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50. உதவிஉணவுக் கட்டுப்பாட் டாளர்என அவரும்
உரித்தான இடமாற்றம் காரணமாய்க் கொழும்பில்
பதவிவழி காரணமாய்ப் புதுப்பதவி பெற்றார்.
பாங்கான சேவைகளால் பேர்பெற்றும் கொண்டார்.

51. ஒருமாத காலம்தான் உத்தமனார் அஸீஸும்
உதவிஉணவுக் கட்டுப்பாட் டாளர்எனப் பதவி
புரிந்திட்டார் கொழும்பினிலே புரிவோமே நன்கு
பணிசெய்து கிடப்பதுவே பெரும்திருப்தி என்றார்.

52. இதன்பின்னே கண்டிக்கு இடமாற்றம் பெற்று
இவர்உதவி அரசாங்க அதிபர்என அமர்ந்தார்.
பதவியென நாட்டினது பல்திக்கும் செல்லும்
பாக்கியமும் பெற்றிட்ட பேறதுவும் பெற்றார்.

53. இதன்பின்னே ஆயிரத்தித் தொழாயிரத்தி நாப்பத்(தி)
இதன்ஏழில் கண்டிஉதவி அரசாங்க அதிபராய்
இதமான பணியெல்லாம் இங்காற்றி நல்ல
இன்பமெலாம் சேவைகளில் இனிதுறவே கண்டார்.

54. கண்டிதனில் மக்களுக்குக் காத்திரப்பணி செய்து
களிப்பேதான் கண்டவராய்க் காட்சியது தந்தார்.
கண்ணெனவே கடமைதனைக் கருதிட்ட இவரை
கண்ணியமாய் மக்களுமே கருதிட்டார் அன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55. கடமைதனை அஸீஸவரும் கண்டியிலே நல்ல
காத்திரமாய்ப் புரிந்திட்ட காலத்தில் அன்று
இடமான கண்டியதன் சித்திலெப்பை பற்றி
இன்னரிய தகவல்களை அறிந்திட்டார் தானே!

56. சித்திலெப்பை அன்னவரின் சிறப்பாம்ஆக் கங்களை
சிரத்தையுடன் அஸீஸவரும் சேகரித்தார் அங்கு.
இத்தகைய ஆக்கங்களைக் கொழும்புஸாஹி றாவின்
இன்னரும்நூ லகத்தில்வைத்(துப்) பாதுகாத்தார் நன்கே.

57. கண்டியிலே உதவிஅரசாங்(க) அதிபர்என அமர்ந்து
கடமைதனைப் புரிந்திட்ட கல்வியலார் அஸீஸும்
மண்மீதில் இடமாற்றம் மிகையாகப் பெற்று
மிளிர்ந்திட்ட வரலாறும் மனதினிலே கொள்வோம்.

58. இதன்பின்னே கண்டியிலே இருந்தவரும் கொழும்பில்
இருக்கின்ற சுகாதார அமைச்சினிலே உள்ள
அதனுடைய தகவலது அதிகாரி ஆனார்.
ஆற்றியதாம் பணிஎல்லாம் அதிசிறப்பாய்ப் புரிந்தார்.

59. பின்னவரும் சுகாதார அமைச்சினது செயலர்
பதவியதும் வகித்திட்ட பேருயர்வும் பெற்றார்.
என்றாலும் தன்சமூகக் கல்வியிலே நாட்டம்
ஏராளம் கொணடவராய் ஏக்கமுடன் இருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60. இதனாலே தன்னுடைய சிவில்சேவைப் பதவியை
இனிநாடா திருப்பதற்கு இறுதிமுடி வெடுத்தார்.
அதனாலே கல்வியிலே ஆர்வமது மிகைக்க
ஆகிட்டார் ஸாஹிறாவின் அதிபர்எனக் கொழும்பில்.

61. ஆயிரத்தி தொழாயிரத்தி நாற்பத்தி எட்டு
ஆண்டுமுதல் அறுபத்தி ஒன்றுவரை ஆன
ஆயபெரும் பதிமூன்று வருடங்கள் இவரும்
அதிபர்எனச் ஸாஹிறாவில் அமர்ந்துபணி புரிந்தார்.

62. சமூகத்தின் கல்விதனைச் சிறப்புறச்சிந் தித்த
சீரியதாம் மாந்தர்எனச் செப்பிடுவோம் இவரை
தமதான நோக்கெல்லாம் தம்மினத்தின் கல்வி
தான்என்றே செயல்பட்ட தியாகியிவர் புரிவோம்.

63. சேவையது ஆற்றுகிற சிந்தனையின் நோக்கில்
சிவில்சேவைப் பதவிதனைத் தூக்கியேதான் எறிந்து
ஆவலுடன் அதிபர்என அவர்ஆன செய்கை
ஆம்இனத்தின் அரும்போதம் ஆகிடுமே அம்மா!

64. கல்வியதே இனத்திற்குக் கீர்த்தியது நல்கும்
கருவாயும் அமையுமெனக் கருதியேதான் அவரும்
நல்முறையாய்க் கல்விக்கு நல்கிட்டார் சேவை
நாட்டினிலே இவர்பணிகள் நிலைத்திடுமே என்றும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. நாட்டினிலே ஸாஹிறாவும் நற்புகழில் ஓங்க
நிகரில்லாச் சேவைகளை நன்றெனவே செய்தார்.
ஈட்டியதாம் இவர்புகழோ இன்னரிய தாகும்.
இலக்கணமும் அதிபர்க்கு இவரென்றே ஆனார்.

66. மூவினத்து மாணவர்கள் மற்றும்ஆ சான்கள்
மகிழ்வுடனே ஸாஹிறாவில் மிளிர்ந்ததனால் அஸீஸும்
ஆவலுடன் ஒற்றுமையை அங்கமைத்துக் கொண்டார்.
அவர்நோக்கு இனஉறவே ஆகுமென அறிவீர்!

67. அதிபர்எனச் ஸாஹிறாவில் அமர்ந்திட்ட போதில்
அவர்இக்பால் சங்கத்தை அழகுறத்தா பித்தார்.
இதனுடனே தமிழ்ச்சங்கம் தமிழ்நாடக மன்றம்
இன்னரிய விவாதமன்றம் இவைகளையும் வளர்த்தார்.

68. அதிபர்எனச் ஸாஹிறாவில் அவர்பணியின் போதில்
ஆனபெரும் வழிகாட்டி என்றேதான் திகழ்ந்தார்.
கதிநல்கும் பாதைதனைக் காட்டுவோரில் அவரும்
கடும்கீர்த்தி மிக்கவராய்க் கால்பதித்தும் நின்றார்.

69. ஆயிரத்தித் தொழாயிரத்தி ஐம்பத்தி மூன்றில்
அஸீஸவரும் தமிழ்நாடு முஸ்லிம்கல் விமாநாட்(டை)
நேயமுடன் அங்குரார்ப்பணம் செய்தேதான் அங்கும்
நாயகராய்க் கல்விக்கு நாமமதும் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70. கல்விக்காய் அஸீஸவரும் ஆற்றியதாம் பணிக்காய்
கௌரவிப்பைத் தமிழ்நாடு முஸ்லிம்கல் விமாநா(டு)
நல்முறையில் அவருக்கு நல்கிட்ட நிகழ்வை
நாம்மீட்டிப் பார்ப்பதிலே நல்மகிழ்வு காண்போம்.

71. தன்னுடைய கண்ணாகத் தரமுடனே கொழும்புத்
தலைநகராம் ஸாஹிராவைத் தான்காத்து வந்தார்.
உன்னதமாம் நேசத்தின் உயரியவெளிப் பாடாய்
உயர்ந்தபல சேவைகளை உவப்புடனே செய்தார்.

72. இலங்கைமுஸ்லிம் கல்விச்ச காயநிதியம் எனும்
இன்னரிய சங்கத்தை இவருருவாக் கியேதான்
இலங்கிடவே முஸ்லிம்கள் கல்விதனில் உயர்ந்து
இந்நாட்டில் திகழ்வதற்கு இதவழியும் செய்தார்.

73. ஆசிரியர் சங்கத்தின் அருந்தலைவர் என்ற
ஆனபெரும் பதவியிலும் அமர்ந்துபணி செய்தார்.
நேசமிகு சேவைகளால் நாட்டினிலே உயர்ந்து
நற்புகழின் நாயகராய் நாமமதும் பெற்றார்.

74. உயர்கல்வித் துறையினிலும் உயர்ச்சியது கண்டு
உன்னதத்தை முஸ்லிம்கள் உரித்தாகப் பெறவே
அயர்வின்றிப் பணியாற்றி அதிசிறப்பும் கண்டார்
அவர்சேவை அத்தனையும் அளப்பரிய தம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

75. வியாபாரச் சமூகமென விளங்கும்முஸ் லிம்கள்
வாஞ்சையுடன் கல்வியிலும் வரலாறு படைக்க
உயரியதாம் நெறிதன்னை உவப்புடனே அஸீஸும்
உரித்தாகத் தந்தேதான் உன்னதமும் பெற்றார்.

76. தென்இந்தியத் தேசத்தில் திறமுறவே நடந்த
தமிழதனின் இஸ்லாமியப் புலவர்தம் பொன்விழா
என்றபெரும் நிகழ்வுக்கு எழிற்தலைமை தந்த
ஏந்தலரே ஆனபெரும் ஏற்றமதும் கண்டார்.

77. சென்னையிலே நடந்திட்ட சிறப்புமிகு முஸ்லிம்
சீர்கல்வி மாநாடு அதற்குமிவர தலைமை
நன்றெனவே தந்திட்ட நபராயும் திகழ்ந்தார்
நற்சேவை நாயகராய் நாமமதும் பெற்றார்.

78. புனிதமிகு குர்ஆனின் மாநாடு லாகூர்
பெருநகரில் நடந்திட்ட போதினிலே அதிலே
கனபுகழார் அஸீஸவரும் கலந்திட்டார் தானே!
காத்திரமாம் கருத்துரையும் நல்கிட்டார் அங்கு.

79. இந்தியாவின் திருச்சியிலே நடந்திட்ட முஸ்லிம்
இளைஞர்தம் மாநாடு இதனினிலும் கலந்தார்.
விந்தைமிகு பணியெல்லாம் வாஞ்சையுடன் ஆற்றி
வரலாற்று நாயகனாய் வையத்தே உயர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

80. இலங்கையது பலகலைக்கழ(க) கவுன்சிலுடன் மற்றும்
இதனுடைய செனட்டினிலும் உறுப்பினராய் இருந்தார்.
இலங்கிடவே நற்பணியும் புரிந்திட்டார் தானே!
இயம்பியேதான் நாடதுவும் போற்றியதே நன்கு.

81. ஐக்கியதே சியக்கட்சியால் பாராளுமன்(ற) செனட்சபை
ஐக்கியமே ஆகிட்ட ஆளாகிப் போனார்.
தக்கபெரும் தலைவரெனும் தனிக்கீர்த்தி கண்டார்
திறனாகச் செயலாற்றிச் சிறப்பதுவும் பெற்றார்.

82. அரசகரும மொழிகள்மீ தானசட்டத் திலவர்
அழகுதமிழ் உரிமைக்காய் செனட்பதவியைத் துறந்தார்.
சிறப்பான கொள்கையுடன் செயல்ப்பட்ட அஸீஸார்
செயல்யாவும் உன்னதமே சிந்தையிலே கொள்வீர்.

83. அதன்பின்னே பொதுச்சேவை ஆணைக்குழு தன்னின்
அங்கத்தவர் என்றேதான் அமர்ந்துபணி செய்தார்.
இதமான கொள்கைதனின் இருப்பிடமாம் இவரோ!
இந்நாட்டின் உயர்ச்சிக்கு இனியவராய் ஆனார்.

84. அறபுத்தமிழ் அகராதியை அறிஞர்எம் எம்உவைஸ்
ஆக்கியளித் திடச்செய்த ஆனபெரும் பெருமை
உரியவராய் அஸீஸவரே உள்ளதுவும் உணர்வோம்.
உயர்வான பணியெல்லாம் உன்னதமாய்ச் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

85. முதுகலைமா(ணி) என்றேதான் மேன்மையுற உவைஸ்
முஸ்லிம்கள் தமிழ்இலக்கியத் துக்களித்த நன்கொடை
இதுவான தலைப்பினிலே இனிதுறவே ஆய்ந்திட
இவ்வறிஞர் அஸீஸவரே இயம்பியதும் புரிவோம்.

86. பாடநூல்எனும் பாங்கான பெருமைதனை நாட்டில்
பெற்றேதான் இஸ்லாமியத் தமிழ்இலக்கிய நூல்கள்
நீடியதாம் புகழ்காணும் நல்லறிஞர் அஸீஸ்கன(வு)
நிறைவேற உவைஸ்அவரும் நல்வழியாய் ஆனார்.

87. அறிஞரஸீஸ் தன்பணிக்கு அடிப்படையே என்று
ஆனபெரும் மேதைஎம்சீ சித்திலெப்பை தன்னை
முறையான நெறியாக முற்றிலுமே கொண்டு
மிளிர்ந்திட்ட தன்மையதும் மேலாகப் புரிவோம்.

88. பன்நூலின் ஆசிரியர் பேரினிலே திகழும்
பாங்கான பேரறிஞராய்ப் பேரதுவும் பெற்றார்.
நன்றெனவே ஆற்றல்களின் நாயகராய்த் திகழ்ந்த
நல்லறிஞர் அஸீஸவரை நெஞ்சத்தே நிறைப்போம்.

89. பிரயாண இலக்கியத்தில் பேர்பெற்றுத் திகழ்ந்த
பெரியாராய் அஸீஸவரும் புகழ்மிகைத்தே உள்ளார்.
சிறப்புமிகு பேராசான் கைலாசபதி கூறும்
சீரியதாம் கருத்தினையும் சிந்தையிலே கொள்வீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90. நாட்டினிலே முஸ்லிம்மா ணவர்களெல் லோரும்
நான்குமொழி எனச்சிங்களம் தமிழ்ஆங்கிலம் அறபு
தேட்டமுடன் கற்றிடவே வேண்டுமெனும் கருத்தை
தெரிவித்தார் அஸீஸவரும் தெரிந்திடுவோம் நாமும்.

91. தாய்மொழியின் கல்வியதே நாட்டின்தே வையென
தரமான கொள்கைதனை திடமுறவே உரைத்தார்.
தூய்மைமிகு சிந்தையிலே தான்திகழ்ந்த இவரோ
தெளிவான கொள்கையதன் குடியிடமும் ஆவார்.

92. அறபுத்தமிழ் மொழியதுவோ அன்புத்தமிழ் மொழியாய்
ஆழ்ந்தபெரும் கருத்துரைத்த அஸீஸவரோ என்றும்
சிறப்பாகத் தமிழ்மொழியைச் சிந்தையிலே கொண்டார்.
செழுமையுற அம்மொழிக்கு சீர்பணிகள் செய்தார்.

93. முஸ்லிம்கள் தாய்மொழியோ தமிழ்மொழிதான் என்றும்
மகத்தான கருத்துரைத்த மேதையிவர் ஆவார்.
அஸ்தமனம் ஆகாத அரியபெரும் தத்துவம்
ஆம்அவரின் வார்த்தைகளின் அவதாரம் ஆகும்.

94. ஆங்கிலத்து மொழிமூலம் பட்டதாரி என்றே
அன்னவரும் ஆகிட்ட போதினிலும் கூட
ஓங்கியதாம் தமிழ்உணர்வில் உலவிட்டார் அன்றோ
உயர்வான தமிழ்ப்புலமையின் உரித்தாயும் திகழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

95. உருதுமொழி தனைஎம்மோர் கற்றிடவே வேண்டும்
உதாரணமாய் இக்பாலின் கவிதைதனைக் கற்க
சிறப்புமிகு கருத்தெல்லாம் செப்பிட்ட இவரை
சிறந்தஒரு ஞானியெனச் சிந்தையிலே கொள்வோம்.

96. ஆலோசனை கேட்போர்க்கு அரியபெரும் நெறியை
அளிக்கின்ற மாந்தரென அவர்நன்கே மிளிர்ந்தார்.
காலமெலாம் இந்நிலையில் கால்பதித்தே வாழ்ந்த
கல்வியலார் இவர்இறையின் கனத்தபெரும் கொடையே.

97. ஒருவர்தம் இயல்பான உணர்வுகளை உணர்ந்து
உயரியதாம் வழிகாட்டும் நெறியினிலே திகழ்ந்தார்.
சிறப்பான ஆற்றல்களின் சங்கமமாய் ஆன
செம்மல்இவர் என்பதையும் சிந்தையிலே கொள்வோம்.

98. பணிப்பாளர் என்றேதான் ஜாமிஆநளீ மியாவில்
பெரும்சிறப்பாய்த் திகழ்ந்திட்ட எம்ஏஎம் சுக்ரியின்
அணியெனவே அமைந்தவரும் அஸீஸேதான் என்று
அகமகிழ்வு கொண்டேதான் அறைந்திடுவோம் நாமும்.

99. பேராசிரியர் எம்எம்உவைஸ் பேராவல் கொண்டு
பாங்குடனே இஸ்லாமிய இலக்கியத்துத் துறையின்
ஆரமென ஆவதற்கு அஸீஸவரே அவர்க்கு
ஆனபெரும் தூண்டுதலாய் ஆனதுவும் அறிவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100. தன்னுடைய முதுகலையின் மாணிக்காம் படிப்பை
தமிழுக்கு முஸ்லிம்கள் தொண்டுகள் பற்றி
நன்றாக மேற்கொள்ள நாயகராம் அஸீஸே
நல்லபெரும் தூண்டுதலாய் நின்றதுவும் புரிவோம்.

101. இலங்கையிலே முஸ்லிம்கள் வாலிபர்இயக் கமென
இயம்புகிற வைஎம்எம்ஏ இயக்கத்தையும் இவரே
இலட்சியத்து நோக்குடனே இங்காரம் பித்தார்
இவர்பணியின் நோக்கெல்லாம் இமயத்து உயர்வே.

102. நாட்டினிலே இஸ்லாத்தின் நல்லறிவு ஞானம்
நல்குகிற கலைக்கூடம் நமக்காதல் வேண்டும்
தீட்டினார் கட்டுரையை நமக்கோர்ஜா மிஆவென
தீர்க்கமிகு பார்வையுடை சீர்அறிஞர் அஸீஸார்.

103. நமக்குவொரு ஜாமிஆவேண் டுமென்றதாம்கருத் ததனை
நவின்றிட்டார் அஸீஸவரும் நாட்டினிலே நளீமியா
எமக்கிங்கு உருவாக இருதசாப்தம் முன்பே
என்பதையும் இனிதுறவே எண்ணத்தில் கொள்வோம்.

104. தீர்க்கமிகு பார்வையுடன் ஜாமிஆவேண் டும்எனத்
தரமான கருத்துரைத்த தாரகையாம் அஸீஸைப்
பேர்சொல்லி இந்நாடும் பெரிதுறவே வாழ்த்தும்
பாங்கான இவர்செயலைப் பிரமிப்பாய் நோக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

105. அறிஞரஸீஸ் எழுத்தினிலே அழகுறயாழ் நகரின்
ஆனதாம்மண் வாசனைகள் அடங்கியதும் காண்போம்.
நெறிபற்றி வாழ்ந்ததிலும் நிலைகொண்ட அன்னார்
நல்மாந்தன் என்பதற்கு நற்சான்றும் ஆவார்.

106. தமிழ்அறிஞர் என்றேதன் தாய்நாட்டில் வாழ்ந்த
தரமான இஸ்லாமியர் தான்அஸீஸாய்த் தேர்வோம்.
தமதான பணிதன்னால் தமிழ்வளர்த்த இவரை
தமிழ்கூறும் நல்லுலகம் தான்போற்றி மகிழும்.

107. இலங்கையிலே முஸ்லிம்கள் தாய்மொழியே என்று
இலங்குவதும் தமிழ்என்றே இயம்பியஸீஸ் நின்றார்.
துலக்கமுற முஸ்லிம்கள் தான்ஏற்றே வாழும்
தமிழ்மொழியின் முக்கியமும் தான்பகன்றே வந்தார்.

108. இலங்கையிலே இஸ்லாம்எனும் இவ்வறிஞர் அஸீஸும்
இனிதுறவே யாத்தளித்த இன்தமிழ்நூல் அன்று
இலங்கையதன் சாகித்திய மண்டலப்பரி சில்தனை
இனிதுறவே பெற்றிட்ட இதிகாசம் புரிவீர்.

109. சிங்களத்தை மட்டும்அர சகருமமொழி ஆக
செயலாக்கும் திட்டத்தைச் செனட்சபையில் அஸீஸ்
பங்கமிகு திட்டமெனப் பெரிதுறவே கூறிப்
பச்சைநிறக் கட்சியிருந்து பதவியதும் துறந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

110. தமிழ்மொழியில் பற்றதனைத் தீராத அளவில்
தான்கொண்ட நபராகத் தான்அவரும் திகழ்ந்தார்.
அழகுறவே அதன்உயர்ச்சிக் காற்றியஅவர் பங்கு
அதிகமென இந்நாடும் அறிந்திடுமே நன்கு.

111. பல்வேறு சூழல்களில் பரீட்சயமே ஆன
பண்டிதராம் அஸீஸவரும் பைந்தமிழின் பற்று
நல்முறையில் கொண்டவராய் நிலைகொண்டார் அன்றோ!
நல்லுயர்வு தமிழடைய நற்பணியும் புரிந்தார்.

112. தன்பெரிய தந்தையராம் தமிழ்ப்புலவர் ஆன
அமுஅசனா லெப்பையுடன் தானான உறவு
உன்னதமாய்த் தமிழ்ஓங்க உதவியதே அவர்க்கு
உயரியதாம் புலமைக்கும் உறுதுணையே ஆச்சு.

113. தமிழ்மொழியின் சூழலிலே யாழ்நகரில் அஸீஸும்
தான்கற்ற காரணமாய் தமிழ்மொழியின் தேர்ச்சி
அமர்ந்தவரில் அழகுறவே ஆக்கியதும் உண்மை
அதனாலே தமிழினிலே அதிநாட்டம் அவர்க்கு.

114. சுவாமிவிபு லானந்தர் சகவாசம் கூட
செந்தமிழில் அவர்நாட்டம் சங்கமமாய் ஆக
கவர்ச்சிமிகு பாதையெனக் கிளர்ந்ததுவும் புரிவோம்.
கன்னித்தமிழ் உயர்வுக்குக் காரணமும் அறிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

115. எம்சீசித் திலெப்பையினது எழிலுறுதமிழ்ப் பணியை
எடுத்தாய்ந்த அஸீஸவரின் ஏற்றபணி யாவும்
இம்மண்ணில் அவர்தமிழ்ப்பணி இனிதுறவே ஓங்க
இதமான நெறியாக இலங்கியதே அம்மா!

116. கிழக்கிலங்கை மக்களுடன் கிளர்ந்திட்ட உறவின்
காரணமாய் அஸீஸவரின் தமிழ்மொழியின் கீர்த்தி
அழகுற்று ஓங்குதற்கு ஆனபெரும் வழியாய்
ஆகிட்ட சரிதையதும் அறிவோமே நன்கு.

117. அறிஞர்அஸீஸ் உரைகளிலே அவர்தம்கட் டுரையில்
அவர்யாத்த நூல்களிலே அருந்தமிழின் உணர்வு
முறையாக ஓங்குவதும் மேலாகப் புரிவோம்.
மாமனிதர் அவராற்றல் மிகையேதான் என்போம்.

118. ஆறுமுக நாவலரும் வாழ்ந்தபெரும் இடமாம்
ஆனவண்ணார் பண்ணையது அஸீஸ்பிறந்த தான
சீரியதாம் இடமாயும் சிறப்புற்ற தாலே
சிறப்புறவே அஸீஸவரும் செந்தமிழில் தேர்ந்தார்.

119. பல்வேறு சூழல்களும் பேரறிஞர் அஸீஸை
பைந்தமிழில் பரிணமிக்கப் பாதையென ஆக
நல்லபெரும் தமிழ்ஞானம் நிறைந்தவராய் அவரும்
நாட்டினிலே உயர்வுற்றார் நாமறிவோம் நன்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

120. இலக்கியத்து ஆர்வத்தில் இன்பம்மிகக் கொண்டார்
இனத்தினது கல்விக்காய் இயன்றபணி செய்தார்.
நலம்சமூகம் காண்பதற்காய் நன்றாக உழைத்தார்.
நாட்டினிலே இவர்போன்ற நல்லோரோ அரிது.

121. ஏற்றமிகு எழுத்தாளன் என்றேதான் திகழ்ந்தார்
ஏராளம் கருத்துரைகள் எடுத்தெழுதி உயர்ந்தார்.
ஆற்றல்மிகு அறிஞர்எனும் அரும்சிறப்பும் பெற்றார்
அவர்திறமை அத்தனையும் ஆண்டவனின் அருளே!

122. இன்பத்தமிழ் மொழிதன்னில் இனிதான பற்றை
இனிதுறவே கொண்டவராய் இலங்கிட்டார் அன்றோ!
உன்னதமாம் தன்மையெலாம் உயர்நிலையில் கொண்ட
உத்தமரே என்றும்நாம் உரைத்திடுவோம் இவரை.

123. செந்தமிழின் இலக்கியத்தில் சிறப்புற்றுத் திகழ்ந்தார்
சீர்மைமிகு கருத்தெல்லாம் சிந்தையிலே நிறைத்தார்.
வந்தனங்கள் கோடிசொல்லி வாழ்த்தியுமே அவரை
வாழ்வெல்லாம் நினைத்திடுவோம் வாஞ்சையுடன் நாமும்.

124. கல்முனையில் அவசரகால அரசாங்க அதிபராய்
கடமையது புரிந்திட்ட காலமதில் அவரும்
நல்லுறவைக் கவிஞர்அப் துல்காதர் லெப்பையு(டன்)
நன்றெனவே பேணியேதான் தமிழ்வளர்த்தார் புரிவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

125. அப்துல்கா தர்லெப்பை ஆனபெரும் கவியை
அழகுறவே என்நினைவில் ஓர்கவிஞர் என்ற
ஒப்பில்லாத் தலைப்பினிலே உயர்கருத்தார் வடித்தார்
உன்னதத்தை ஒப்பிட்டார் உயர்மேதை அஸீஸார்.

126. தமிழினது இலக்கியத்து மோகத்தில் அவரும்
தரமான உயர்வினிலே தான்திகழ்ந்து நின்றார்.
அமிர்தம்எனத் தமிழ்மொழியை அவரெண்ணித் தானே
ஆனபெரும் பணியெல்லாம் அதற்காகச் செய்தார்.

127. இராமாயணத் தில்ஆர்வம் இனிதுறவே கொண்ட
இவர்அதனின் பகுதிதனை இன்தமிழிற் கற்றார்.
சிறப்புறவே செந்தமிழின் சீர்மை இலக்கியத்தில்
சிந்தையெலாம் நிறைந்தவராய்த் திகழ்ந்திட்டார் தானே!

128. ஏழுதமிழ் நூற்களினை ஏற்றமுடன் யாத்து
ஏராளப் புகழ்ச்சிகளை எட்டியுமே திகழ்ந்தார்.
ஆழத்து ஞானத்தின் அமைவிடமாய் ஆன
அஸீஸவரின் ஆற்றல்களை அறைந்திடவும் ஒண்ணா.

129. அறிஞரஸீஸ் ஒரேயொரு ஆங்கிலத்து நூலை
ஆக்கியதும் அழகுறவே அறிவோமே நாமும்.
சிறப்புறவே கல்விபற்றிச் செப்பும்நூல் ஈது
சிந்தையிலே நிறைத்திதனைச் செயற்படுவோம் நாமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

130. இலங்கையிலே இஸ்லாம்எனும் இந்நூலை யாத்தார்.
இதுவவர்முதல் நூலாம்இரு பத்தாறு கட்டுரை
துலங்குமிது அரசசாகித் தியவிருதும் பெற்று
தூயபெரும் சிந்தனையின் பொக்கிசமாய் ஆச்சு.

131. மேதையஸீஸ் நான்குமுறை மிஸ்றுக்குச் சென்ற
மேலான அனுபவத்தை மொழிகின்ற வகையில்
போதனைகள் பொருந்தியதே மிஸ்றின்வசி யநூல்என
புரிந்திதனைப் போற்றியேதான் பெருமகிழ்வு காண்போம்.

132. கிழக்காபிரிக் கக்காட்சிகள் கூறுவதாம் இந்நூல்
தானங்கு மெற்கொண்ட ஒருமாத கால
அழகுமிகு அனுபவத்தை அறைகிறதும் அறிவீர்
ஆனபெரும் சிறப்பாயும் அமைந்ததுவும் புரிவீர்.

133. மலேசியாவின் முதலாவது உலகத்தமிழ் மாநாட்(டில்)
மகிழ்வுடனே கலந்திட்ட மேதையராம் அஸீஸும்
துலங்கியதாம் அம்மாநாட் டினதுநிகழ் வுதனை
தமிழ்யாத்திரை நூலாகத் தான்ஆக்கித் தந்தார்.

134. ஆபிரிக்க அனுபவம்எனும் ஆனஇவர் நூலோ
அஸீஸவரின் அனுபவத்துக் கட்டுரைமுப் பத்தைந்(தை)
ஞாபகமாய்ப் பகர்கின்ற நேர்த்திமிகு தன்மை
நிரம்பியதாய் அமைந்ததையும் நினைவினிலே கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

135. ஆறுகட்டுரை ஆனதனின் ஆக்கமெனத் திகழும்
அறபுத்தமிழ் எங்கள்அன் புத்தமிழ்எனும் நூலை
சீரியதாம் சிந்தைகளின் சங்கமமாய் இவரும்
சிறப்புடனே யாத்தளித்த சங்கதியும் புரிவோம்.

136. மொழிபெயர்ப்புக் கலைஎன்னும் மேதையிவர் யாத்த
மகத்தான நூலதுவும் மாபலனே எமக்கு
அழகுறவே மொழிபெயர்ப்பின் அவசியத்தைச் செப்பி
அத்துறையில் ஈடுபட அறைகிறதே அதுவும்.

137. ஓர்மாத காலமஸீஸ் மேற்கொண்ட பயண
உயரியதாம் அனுபவத்தை கிழக்காபிரிக்(க) காட்சியெ(னும்)
சீர்மிக்க நூலாகச் செய்தளித்தார் அன்றோ
சிந்தையெலாம் தூண்டியது திகழ்கிறதே நன்கு.

138. பன்நூலின் ஆசிரியராய்ப் பேர்பெற்றுத் திகழும்
பேரறிஞர் அஸீஸவரின் புலமையதோ மிகைத்து.
நன்றான ஞானத்தில் நிலைகொண்ட அவரை
நாயனவன் கொடையென்றே நாம்போற்றி மகிழ்வோம்.

139. கல்விஇலக் கியம்சேவை யென்றுஉழைத் திட்ட
கர்த்தாவாம் எம்சீசித்திலெப் பையின்புகழை எல்லாம்
நல்முறையில் அஸீஸவரும் நாடறியச் செய்தார்
நிகரில்லா அவர்பணியின் நிலையாவும் பகன்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

140. அறபுத்தமிழ் ஆலிம்புல வர்என்றே திகழ்ந்த
அஸீஸவரின் சின்னப்பெரி யப்பாவாய் ஆன
சிறப்புமிகு அசனாலெப்(பைப்) புலவர்தம் திறனை
செந்தமிழும் புரிவதற்குச் சிறந்தவழி வகுத்தார்.

141. வித்தகராம் சுவாமிவிபுலா னந்தர்தம் திறனில்
வாஞ்சைமிகு பற்றுதலைப் பாரியதாய்க் கொண்டார்.
அத்தனையாம் அவர்திறனின் அருமையெலாம் எழுதி
அவர்புகழைப் பறைசாற்றி அகமகிழ்வும் கண்டார்.

142. சைவமக்கள் மேம்பாடு தமிழ்மொழிவளர்ச் சியெனச
சிறப்பாகப் பணிசெய்த ஆறுமுகநா வலரை
உவகையுடன் உரைத்ததுடன் உயர்எழுத்தில் வடித்தும்
உன்னதமாம் பணிக்கஸீஸும் உரித்தாகிப் போனார்.

143. தமிழறிஞர் சிவாஜெயந்தன் திறமையது மெச்சி
திறன்படவே போற்றியவர் திகழ்ந்திட்டார் அன்றோ!
கமழ்கின்ற அஸீஸவரின் கனதிறமை எல்லாம்
காண்கின்ற போதினிலே களிப்பேதான் எமக்கு.

144. உருதுக்கவி என்றேதான் உலகெல்லாம் போற்றும்
உயர்கவியாம் இக்பாலின் கவியினிலே மூழ்கி
அருமைமிகு அவர்பக்தன் ஆகிட்டார் அஸீஸும்
ஆம்அவர்கவி கண்டவரும் அதிர்ச்சியிலே ஆழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

145. இக்பாலை அறிமுகமாய் இந்நாட்டில் அதிகம்
இயம்பிட்ட மேதையென இயம்பிடுவோம் அஸீஸை
அக்கறைகள் அவர்கவியில் அதிகமெனக் கொண்ட
ஆனபெரும் அறிஞரென்றும் அறைந்திடுவோம் நன்கு.

146. இக்பால்பற் றியபன்னிரு கட்டுரைகள் இவரும்
இன்தமிழில், ஆங்கிலத்தில் இனிதுறவே யாத்தார்.
தக்களவு இவர்பற்றித் தாய்நாட்டில் பரப்பிய
தலைமகனாய்த் தானேதான் திகழுகிறார் தெரிவோம்.

147. அதிபர்என ஸாஹிறாவில் அமர்ந்திட்ட போதில்
அங்கான புதியகட்டிடம் ஆனதற்கு அவரும்
அதிசிறப்பை நல்குதற்காய் இக்பால்கட் டிடம்என
ஆனபெரும் நாமத்தை அளித்திட்டார் அன்றோ!

148. மகாகவியாம் இக்பாலின் மேல்கொண்ட பக்தியின்
மேலீடு காரணமாய் மேதையஸீஸ் அவரும்
புவனத்துச் செல்வமெனப் புலர்ந்ததனது மகனுக்(கு)
புகழ்ச்சியுறு இக்பால்எனப் பெயரிட்டார் புரிவோம்.

149. வங்கத்து மாகவிகா ஸிநஸ்றுல்இஸ் லாத்தை
வளமுறவே ஈழத்தில் அறிமுகம்செய் துவைத்த
மங்காத புகழுக்கும் மகுடமென அஸீஸ்தான்
மிளிர்கின்றார் என்பதையும் மனதினிலே கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

150. புனிதமிகு றமழான்பெரு நாளின்தத் துவத்தை
பகரவந்த அஸீஸவரும் பாங்குடனே அன்று
இனிமைமிகு தத்துவத்துக் கவியான நஸ்றுல்
இஸ்லாத்தின் கவியொன்றை மொழிபெயர்த்தும் தந்தார்.

151. புரட்சிதனை எகிப்தினிலே புரிந்திட்ட செய்கை
பிழையென்று இலங்கைக்கு நாடுகடத் தப்பட்(ட)
ஒறாபிபாஷா அன்னவர்தம் உன்னதத்தை நாட்டில்
உரைத்தவராய், எழுதியவராய் உள்ளவரும் அஸீஸ்தான்.

152. உன்னலராம் ஒறாபிபாஷா உருவப்படம் தன்னை
உயர்கல்விக் கூடம்ஸா ஹிறாவில்அஸீஸ் அவரும்
நன்றெனவே ஆயிரத்தித் தொழாயிரத்திஐம் பத்தைந்(து)
நிலவும்மே பதினேழில் திரைநீக்கி வைத்தார்.

153. பாகிஸ்தான் தந்தையராம் முகம்மதலி ஜின்னாஹ்
பெருமையெலாம் பகன்றஸீஸும் புகழ்பரப்பி நின்றார்.
ஆக்கம்பல நூல்களிலே அவர்பற்றி யாத்து
அதிசிறப்பாய் அவரையுமே அறிமுகமே செய்தார்.

154. ஆயிரத்தித் தொழாயிரத்தி ஆனஎண்பதாம் ஆண்டில்
அஸீஸவர்க்கு கௌரவக்கலா நிதிப்பட்டம் தன்னை
நேயமுடன் யாழ்பல்கலைக் கழகமது வழங்கிய
நிகழ்வதுவும் எம்நெஞ்சில் நிறைந்ததுவும் புரிவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

155. ஆயிரத்தித் தொழாயிரத்தி எண்பத்தி ஆறில்
அரசாங்கம் இலங்கையதன் தேசியத்தலை வராக
தூயவராம் அஸீஸவரைத் தான்ஏற்றுத் தானே
திகழ்நினைவு முத்திரையை வெளியிட்ட தம்மா!

156. இந்தியாவின் புதுடெல்லி குறிக்கோள்கள் தொடர்பில்
இன்னரும்கல் விநிலையமது இருபதாம்நூற் றாண்டின்
விந்தைமிகு தலைவர்கள் நூறுபேர்களில் அஸீஸும்
விளங்குகிறார் ஒருவரென விளக்கியதே நன்கு.

157. பெருமையது இல்லாது பணிவாக நடந்தார்
பக்குவமே கொண்டஇவர் பகட்டதனை வெறுத்தார்.
சிறப்பாக அனைவர்தம் சிந்தையையும் கவர்ந்து
சீர்திருத்தச் செம்மல்எனச் சரித்திரத்தில் மிளிர்ந்தார்.

158. அகங்காரம் இல்லாமல் அடக்கமுடன் நடந்தார்.
ஆருடனும் பழகுகையில் அன்பாகத் திகழ்ந்தார்.
அகத்தூய்மை காத்தேதான் அதிமேன்மை பெற்றார்.
ஆனபெரும் பண்பெல்லாம் அடங்கியதே இவரில்.

159. மண்ணுலகில் மாபெரிய மகத்தான பணிகள்
மனமுவந்து செய்திட்ட மாமனிதர் அஸீஸை
எண்ணுகிற வேளையெலாம் எம்மிதயம் அவர்மேல்
ஏராள வாஞ்சையது ஏற்படலும் காணீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

160. ஞானத்தின் ஊற்றாக நற்பணிச்சான் றாக
நம்மினத்தின் பேறாக நன்றான இவரை
வானத்துத் தாரகையாய் வாயாரப் புகழ்வோம்
வரலாற்றில் அவரிடமும் வளமான தென்போம்.

161. தூரத்துப் பார்வையது துலங்கிடவே அவரும்
தரமாகத் திகழ்ந்ததையும் தெரிந்திடுவோம் நாமும்.
ஆரமென அவருக்கு ஆகியது எல்லாம்
அத்தூரப் பார்வையதாய் அறைந்துமே மகிழ்வோம்.

162. இந்நாட்டில் முஸ்லிம்கள் இதயத்தில் நல்ல
இருப்பிடத்தைப் பெற்றிட்ட இன்னரிய மாந்தர்
விந்தைமிகு ஆற்றலெலாம் விஞ்சிட்ட இவரை
வல்லோனின் பேறாக வாழ்த்தியுமே துதிப்போம்.

163. ஆளுமைகள் அத்தனையும் அமைந்தவராய் ஆன
அஸீஸவரின் ஆற்றல்களோ அளப்பரிய தாகும்.
நாளுமவர் திறமைகளை நாம்போற்றி நிற்போம்.
நம்மினத்து உயர்வென்றே நாம்அவரைப் புகழ்வோம்.

164. பல்மொழியின் ஆற்றலதும் பரிணமித்து நின்ற
பாங்கான தலைவரெனப் பார்மிசையே திகழ்ந்தார்.
நல்லபெரும் மாந்தர்க்காம் நற்சிறப்பு யாவும்
நன்றெனவே பெற்றவராய் நம்மிடையே மிளிர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

165. அன்றையதாம் பொழுதினிலே அஸீஸவரின் உரைதான்
அவ்விழாவின் அணிகலனாய் ஆகியதும் அறிவோம்.
நன்றெனவே விழாவிற்கு நல்வரவை அவரும்
நல்கிவிடல் அவசியமாய் நிலவியதும் புரிவோம்.

166. புன்னகையின் முகத்துடனே பொழிவாகத் திகழ்ந்தார்
புதுமைமிகு கருத்துரையும் பகன்றேதான் நின்றார்.
நன்றான கொள்கைதனின் நிலைக்களமும் ஆனார்.
நாயன்மேல் பக்தியதும் நிறைந்தவராய்த் திகழ்ந்தார்.

167. மக்களது மனங்களிலே மறையாது வாழும்
மகத்துவமும் பெற்றவராய் மிளிர்கின்றார் தானே!
திக்கெல்லாம் மக்களுமே தான்போற்ற நாட்டில்
தனித்தபெரும் புகழினிலே திகழ்கின்றார் அன்றோ!

168. நாவலரே என்றபெரும் நற்சிறப்பும் பெற்றார்
நாளுமிவர் இனத்தினது நல்லுயர்வில் திளைத்தார்.
ஆவல்எலாம் சமூகத்தின் அதியுயர்வு என்ற
ஆனபெரும் கொள்கையிலே அதிநாட்டம் கொண்டார்.

169. ஈழத்து முஸ்லிம்கள் இதிகாசம் தன்னில்
இன்னரிய இடம்பிடித்து இலங்குகிற அஸீஸை
ஆழமுற இதயத்தில் அமர்த்தியேதான் மகிழ்வோம்
அவர்நெறியில் பணியாற்றி அகமகிழ்வும் காண்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

170. கற்றலுடன் வாசித்தல் களஆய்வு என்றே
காலமதை அஸீஸவரும் காத்திரமாய்க் கழித்தார்.
பற்றெல்லாம் சமூகத்தின் பேருயர்வு என்ற
பாங்கான நோக்கத்தைப் பற்றியுமே நடந்தார்.

171. அறிஞர்அஸீஸ் அன்னவரின் அத்தனையாம் செயலும்
அடியொற்றி நடப்பதற்கு ஆனபெரும் நெறியாம்.
முறையான மனிதன்என மண்மீதில் வாழ்ந்த
மாமனிதர் என்றிவரை மகிமையுடன் புகழ்வோம்.

172. இருபதாவது நூற்றாண்டின் இஸ்லாம்இனத் தலைவருள்
இன்னரிய இடத்தினிலே இலங்குகிறார் அஸீஸார்.
பெருமைக்கு உரித்தான பேரறிஞர் இவரைப்
போற்றியேதான் புகழ்வதிலே பெருமையதே காண்போம்.

173. தீன்மறையாம் குர்ஆனைத் திறம்படவே ஓதும்
திறமையதும் கொண்டவராய்த் திகழ்ந்திட்டார் அன்றோ!
ஆன்மீக அறிவினிலும் அதிமேன்மை பெற்ற
ஆளாகத் திகழ்ந்ததையும் அழகுறவே அறிவோம்.

174. இஸ்லாத்தின் நெறிமுறைகள் இனிதுறவே பற்றி
இப்புவியில் வாழ்வதிலே இன்பமது கண்டார்.
முஸ்லிம்இனப் பண்பினது இலக்கணமாய்த் திகழ்ந்த
மேதையிவர் என்பதிலே மகிழ்ச்சியதே காண்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

175. சுவர்க்கமது மறுமையிலே செல்லும்நிலை கிட்டின்
சிந்தையறி இறைவனிடம் செப்பிடுவேன் நானும்
தவறாது நூலகம்தர வேண்டுமங்கு என்ற
தீராதிவர் வாசிப்புத் தாகத்தைப் புரிவோம்.

176. முற்போக்கு வாதியென முனைப்பாக நாட்டில்
மக்களெலாம் மொழிகின்ற மாண்பதையும் பெற்றார்.
பற்றெல்லாம் இனத்தின்மேல் பெருமளவு கொண்ட
பண்பதுவும் நிறைந்தவராய்ப் புலர்ந்திட்டார் தானே!

177. இனங்களிடை ஒற்றுமைகள் இந்நாட்டில் ஓங்க
இலட்சியமாய் அஸீஸவரும் இனியபணி புரிந்தார்.
கனவினிலும் வேற்றுமைகள் காணாது இனங்கள்
கூடியதாம் ஒற்றுமையில் குதூகலிக்கச் சொன்னார்.

178. சுவாமிவிபுலா னந்தருடன் அஸீஸவர்க்கு ஆன
சுந்தரமாம் உறவதுவோ தமிழ்முஸ்லிம் உறவை
கவர்ச்சியுடன் வளர்ப்பதற்குக் கூடியதாம் சான்று.
கவனத்தில் கொண்டிதனைக் காத்திடுவீர் நன்கு.

179. ஆயிரமாம் பணிசெய்து அகமகிழ்வு கண்ட
அருட்கொடையாம் அஸீஸவரின் ஆவியது அன்று
ஆயிரத்தித் தொழாயிரத்தி எழுபத்தி மூன்றில்
ஆனகார்த்திகை இருபத்தி நான்கில்பிரிந் ததம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

180. மண்ணுலகும் அவர்மறைவால் மீளாத்துயர் அடைய
முஸ்லிம்இனம் சோகத்தில் மூழ்கியதே அந்நாள்.
கண்ணீரின் பெருக்கெல்லாம் கவலையெனச் சொரிய
கனசேவைக் கர்த்தாஅஸீஸ் காசினியைத் துறந்தார்.

181. சேவைக்கோர் செம்மல்எனச் சீவித்த அஸீஸார்
செகவாழ்வை முடித்திட்ட சோகமதைப் பாரீர்.
காவல்என இனத்திற்குக் காலமெலாம் வாழ்ந்த
கர்த்தாஅவர் கண்மூடிய கடும்சோகம் காணீர்.

182. முஸ்லிம்இனம் நாட்டினிலே முன்னேற்றம் காண
முற்றாகச் சேவைகளில் மூழ்கிட்ட அஸீஸார்
அஸ்தமனம் ஆகிட்ட அவலத்தின் நிகழ்வு
ஆகியதே வரலாற்றில் அதிசோகம் ஆக.

183. துயரதனின் சம்பவமாய்த் துலங்கியதாம் அன்று
தூய்மைமிகு அஸீஸன்னார் துஞ்சியதை எண்ணி
இயற்கையதன் நியதியென இதயத்தால் தேர்ந்தே
இந்நாட்டில் முஸ்லிம்கள் இருந்ததுவும் புரிவீர்.

184. சமூகத்துப் பெட்டகமாய்ச் சங்கமித்த அஸீஸார்
சாவினது பிடியினிலே சேர்ந்திட்ட செயலால்
இமயத்துச் சோகத்தில் இனமான தம்மா!
இதிகாச அவலமென இதுவான தம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

185. முஸ்லிம்கள் முதுசமென மாபுகழில் திகழ்ந்த
மாமேதை அஸீஸவரின் மரணத்தால் அன்று
அஸ்தமனம் சமூகமதே ஆனதுமாம் நிலைமை
ஆட்கொண்டு நின்றிட்ட அவலமதும் புரிவீர்.

186. சேவைகளால் உயர்ந்தேதான் சிறந்ததடம் பதித்த
சீர்அறிஞர் அஸீஸவரின் செகத்தினது வாழ்வு
சாவாகிப் போனதனால் சோகத்தில் சமூகம்
சங்கமமாய் ஆகிட்ட சரிதைதனைப் பாரீர்.

187. பான்ஸ்பிளேஸ் கொழும்பேழின் இல்லத்திற் தானே
பாருலகப் பயணத்தை பெருமகனார் தொடர்ந்தார்.
ஆண்டவனின் சந்நிதானம் அடைவதற்காய் அவரும்
அகிலத்துத் தொடர்பற்ற ஆளாகிப் போனார்.

188. மருதானைப் பள்ளியிலே மக்கள்கட லாக
மையித்துத் தொழுகையது மாண்பாய்நிறை வேற
சிறப்புமிகு குப்பியாவத்(தை) மையவாடி தனிலே
செம்மலராம் அஸீஸன்னார் சீரடக்கம் ஆனார்.

189. இறையிடத்தே அஸீஸவரும் ஈடேற்றம் காண
இதயத்தால் முஸ்லிம்கள் இறைஞ்சினரே இங்கு
நிறைவான சொர்க்கத்தில் நிரந்தரமாய் அவரும்
நிலைகொள்ள நாயகனை நன்றுடனும் கேட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

190. மேலான சொர்க்கத்தை மேவிவிடக் கபுரில்
மன்னவனே! அஸீஸார்க்கு மாஉதவி நல்கு.
காலமெலாம் இனப்பணியில் கால்பதித்த அவரின்
கபுரறையைச் சொர்க்கத்துச் சோலையென ஆக்கு.

191. உத்தமராம் அஸீஸவரும் உயிர்வாழ்ந்த காலம்
உலகினிலே புரிந்திட்ட ஒவ்வாப்பிழை யாவும்
வித்தகனே! அல்லாஹ்வே! வாஞ்சையுடன் பொறுத்து
வனப்புமிகு சொர்க்கத்தை வழங்கிடுவாய் அவர்க்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேறு

## (குறள்)

192. புலமையெலாம் பெற்றினத்துப் பேரிடமே என்று
இலங்குமஸீஸ் ஆற்றல் இயல்பு.

193. இனஉயர்வின் சான்றாய் இலங்கும் அஸீஸை
மனதில் இருத்தி மகிழ்.

194. சிறப்பு இனத்திற்கோ சீர்கல்வி என்று
அறைந்த அஸீஸவரை ஆய்.

195. தீர்க்க தரிசனத்தில் தேர்ந்த அஸீஸவரின்
பேர்போற்றி வாழ்வாய் புரிந்து.

196. விந்தைமிகு சேவைகளை வாஞ்சையுடன் செய்தஅஸீஸ்
நந்தவனம் போல்வார் நமக்கு.

197. பல்வேறு சேவைகளின் பாசறையே ஆனஅஸீஸ்
நல்நதியே போல்வார் நமக்கு.

198. ஈழத்தில் முஸ்லிம்கள் இன்பநிலை காணஅஸீஸ்
ஆழப் பணிசெய்தார் ஆய்.

199. காலமெலாம் முஸ்லிம்கள் காத்திரமாயப் போற்றவஸீஸ்
கோலமே ஆனார் கருது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

200. அறிஞரஸீஸ் முஸ்லிம்கள் ஆனபெரும் சொத்தாய்ச்
சிறப்புற்றார் அன்றோ செகத்து.

201. செந்தமிழின் மேன்மைக்காய்ச் சீர்பணிகள் செய்தவஸீஸ்
விந்தையின் மாந்தர் விளங்கு.

202. சுவாமிவிபு லானந்தர் சீர்உறவில் நன்றாம்
உவகையஸீஸ் கொண்டார் உணர்ந்து.

203. அல்லாமா இக்பால் அருங்கவிஞர் மேன்மைதனை
சொல்லியவர் என்றஸீஸைச் செப்பு.

204. உயரியதாம் சிந்தனையின் ஊற்றிடம் என்று
வியந்து அஸீஸை விளக்கு.

205. அல்லாமா இக்பால் அறைந்தஒளிப் பார்வையை
அல்லோ அஸீஸ்பெற்றார் ஆய்.

206. சேவைக் கஸீஸ்என்று செப்புகிற வண்ணமிவர்
ஆவலதில் கொண்டார் அறை.

207. அறிவுடன் ஆற்றலும் ஆனபெரும் மேன்மை
சிறப்புறப்பெற் றாரஸீஸ் செப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

208. காத்திரமாம் சேவைகளைக் காலமெலாம் ஆற்றியதால்
பூத்தார் புகழஸீஸ் பேசு.

209. மாற்றின மக்களையும் மாண்பாய் மதித்திட்ட
போற்றுதலின் பண்பஸீஸைப் பேசு.

210. மாமனிதர் என்றபெரும் மாண்பதனைப் பெற்றவஸீஸ்
நாமமது ஓங்கும் நிலத்து.

211. நன்நெறியில் வாழ்ந்திட்ட நாயக ராமஸீஸை
உன்னதமாய்ப் போற்றும் உலகு.

212. நியதிநெறி பற்றிட்ட நல்லார் அஸீஸை
உயர்ந்தோராய்ப் பார்க்கும் உலகு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு
### (அகவல்)

213. அஸீஸே உந்தன் பணியெல்லாம்
அழகாய் இனத்திற் காகியதே.
உசிதம் என்றே முஸ்லிம்கள்
உயரும் வழியாய் ஓங்கியதே!

214. உந்தன் வருகை இனத்திற்கு
உயர்வின் நெறியாய் ஆகியதே!
விந்தை மிக்க வகையினிலே
விரைந்து இனமும் உயர்ந்ததுவே.

215. அறிஞர் நாமம் உன்னையுமே
அடைய அதற்கும் அணியானாய்.
நெறிகள் பகரும் நன்நூலாய்
நிலத்தில் நீயும் மிளிர்ந்திட்டாய்.

216. உன்னை அடைந்து கொண்டதனால்
உவகை இனமும் கண்டதுவே.
உன்னதம் யாவும் உன்னால்தான்
உரித்தாய் அதுவும் பெற்றதுவே!

217. முதுசம் என்றே எம்மினத்தில்
மிளிரும் பாக்கியம் பெற்றாயே!
அதுவும் உயரும் வழியென்றே
ஆகி நீயும் உயர்ந்தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

218. ஆற்றல் என்ற சொல்லுக்கும்
அர்த்தம் நீதான் ஆனாயே!
ஏற்றம் காண எம்மோர்க்கு
ஏற்ற நெறியாய்த் திகழ்ந்தாயே!

219. இறையின் அச்சம் கொண்டோராய்
இஸ்லாம் இனத்தார் இருப்பதற்கு
நிறைவாய் நெறியும் உரைத்தாயே!
நன்னெறி ஆயும் ஆனாயே!

220. மாற்றின மாந்தர் யாவரையும்
மாண்பாய் மதித்து நடந்தாயே!
ஏற்றம் என்றே எழில்நெறியில்
என்றும் வாழப் பகன்றாயே!

221. கண்ணியம் மிக்க மனிதன்என
கடுமை உயர்வில் மிளிர்ந்தாயே!
எண்ணத்தூய்மை இதனினிலும்
ஏற்ற உயர்வாய் ஆனாயே!

222. பரந்த ஞானம் என்பதற்கும்
பாசறை என்று திகழ்ந்தாயே!
கரத்தை என்றும் தூய்மையுடன்
காத்தே உயர்வும் கண்டாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

223. செந்தமிழ் மொழியும் சிறந்தோங்க
சிறப்பாம் பணிகள் புரிந்தாயே!
வந்த வாழ்வின் சோதனையை
வசந்தம் என்று ஏற்றாயே!

224. பொறுமை தானே உயர்ச்சியென
பெரிதும் போற்றித் திகழ்ந்தாயே!
சிறுமைத் தனங்கள் சீவியத்தில்
சிறிதும் அணுகா வாழ்ந்தாயே!

225. எந்த நிகழ்வு ஆனாலும்
ஏற்றம் அதற்கு மிளிர்ந்தாயே!
உந்தன் உரையே அதனினிலே
உயர்வாய் ஆக உயர்ந்தாயே!

226. உண்மை நேர்மை நீதிகளின்
உறைவிடம் என்றும் ஆனாயே!
மண்ணில் எல்லா மாண்புகளும்
மிளிரும் இடமாய்த் திகழ்ந்தாயே!

227. உந்தன் பெயருள் முஸ்லிம்கள்
உயர்வு யாவும் அடங்கியதால்
அந்தோ! அதனின் சிறப்புக்கு
ஆன அடிப்படை ஆனாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

228. இனத்தின் உயர்வை இலக்காக்கி
இனிதே பணிகள் ஆற்றிட்ட
கனத்த சிந்தைக் காரர்என
கீர்த்தி கொண்டும் திகழ்ந்தாயே!

229. உன்னை எண்ணும் போதெல்லாம்
உவகை உளத்தே ஆகிறதே!
மன்னோன் இறையின் மகத்துவமாய்
மனதில் பதிந்து போனாயே!

230. உயரிய உந்தன் உணர்வேபோல்
உயர்வை இனத்திற் களிப்போர்கள்
உயரிய தொகையாய் ஆகிட்டால்
உன்னதம் அதனின் உரித்தாகும்.

231. எங்கள் சமூக வரலாற்றில்
ஏற்றம் என்றே எமக்கான
தங்கம் என்றே உனைப்புகழ்வோம்.
தரத்தில் மேலோன் என்றிடுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேறு

## (வெண்பா)

232. இலங்கையிலே முஸ்லிம்கள் இன்னுயர்வு காண
துலக்கமுறு கல்வி துணையாய் - அமைந்திடுமே
ஆதலினால் கற்று அதியுயர்வு கண்டிடப்
போதனைசெய் தாரஸீஸ் போற்று.

233. கல்வியிலே முஸ்லிம்கள் காண்கின்ற மேன்மையது
நல்லுயர்வு என்றபெரும் நாமத்தில் - அல்லோ
திகழ்ந்துவிடும் என்றஸீசும் தத்துவத்தைச் செப்பிப்
புகழுற்றார் என்றே பகர்.

234. பரந்திட்ட சிந்தனையின் பாரியதாம் தன்மைதனைப்
பாங்குறப் பெற்றுப் புலரும் - பெரியார்
அறிஞர் அஸீஸவரின் ஆளுமைகள்எல்லாம்
நெறியாகும் என்றும் நிலத்து.

235. செந்தமிழின் மேன்மைக்காய் சீர்பணிகள் செய்தெங்கள்
சிந்தை நிறைந்த செயல்வீரர் - விந்தைமிகு
பேர்அறிஞர் ஆனவஸீஸ் பேர்என்றும் ஓங்கியே
சீர்பெறும் இந்தச் செகத்து.

236. உன்னதமாம் பண்புகளின் ஊற்றிடமே ஆகியவர்
நன்றான கொள்கைகளின் நாயகரும் - என்றானார்.
சத்தியத்தைச் சீராய்ச் சகதியிலே காத்தவஸீஸ்
வித்தகரும் என்றே விளங்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

### (அறுசீர்)

237. நாட்டினில் முஸ்லிம் சமூகம்
நன்னிலை காண்ப தற்குக்
காட்டிய அவரின் நெறிகள்
காத்திர மாகு மம்மா!
ஏட்டினில் அஸீஸைப் பற்றி
எழுதிடும் நூல்கள் யாவும்
காட்டுதே இதனை என்றே
களிப்புடன் கண்டு கொள்வீர்.

238. கல்வியில் முஸ்லிம் சமூகம்
கண்டிடும் உயர்வு தானே
நல்லதாம் உயர்வு என்று
நன்றே நவின்று நின்றார்.
சொல்லரும் செல்வம் என்று
சிறப்பாம் தகுதி யாவும்
அல்லோ அதற்கு ஆகும்
அழகுற அறிவீர் என்றார்.

239. மனிதர்கள் உலகில் நல்ல
மாண்புறு தெளிவு காண
இனிதுறக் கவிஞர் இக்பால்
இவர்கவி அறிதல் வேண்டும்.
கனவிலும் உயர்வாம் சிந்தை
கொண்டிடப் பணித்தும் நின்றார்.
அனைவரும் உவக்கும் நல்ல
ஆழ்ந்ததாம் கருத்தும் சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

240. தூரமாம் பார்வை கொண்டு
துலங்கிட வேண்டு மென்றார்.
ஆரமாய்ச் சமூகம் தன்னை
அனைத்துமே வாழச் சொன்னார்.
பாரமாய் விடயம் தன்னைப்
பார்க்கா முயலச் சொன்னார்.
தாரகை என்றே அவரும்
தனிப்பெரும் உயர்ச்சி கொண்டார்.

241. மக்களின் மனதைக் கவரும்
மாண்புறு ஆற்றல் பெற்றார்.
திக்கெலாம் புகழை நன்கு
திறம்பட அடைந்தும் கொண்டார்.
அக்கறை அதிகம் கொண்ட
ஆள்என இனத்திற் கானார்.
தக்கதாம் திறமை எல்லாம்
தானுமே அடைந்தும் நின்றார்.

242. எத்தகு இடரே வரினும்
ஏற்றமே கண்டு நின்றார்.
வித்தகர் இவரோ என்றும்
விஞ்சிய திறமை கொண்டார்.
உத்தமர் என்றே என்றும்
உன்னதம் பெற்றும் நின்றார்.
சத்தியம் தன்னைத் தனது
சான்றெனப் பற்றிக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

243. பலவாம் பணிகள் தன்னை
பாங்குடன் செய்து வந்தார்.
நலவாம் திட்டம் யாவும்
நன்றென ஏற்றும் நின்றார்.
இலங்கிய இவரின் ஆற்றல்
இமயமாய் இருந்த தம்மா!
உலகினில் இவரின் மேன்மை
உன்னதம் ஆகும் அன்றோ!

244. உன்னதம் என்றே இனத்தின்
உயர்ச்சியாய் ஆன இவரை
என்றுமே மறக்கா நிலையில்
ஏற்றமாய் இதயம் கொள்வோம்.
நன்றாம் தன்மை எல்லாம்
நிறைந்துமே வாழு கின்றார்.
இன்னதால் அஸீஸை யாமும்
இனமதன் பேறு என்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேறு

## (புதுக்கவிதை)

245. அறிஞர் அஸீஸே!
உன் பிறப்பு
இந்நாட்டு முஸ்லிம் இனத்தின்
உயர்ச்சியின் தலமாகவே
உணரப்படுகிறது.

246. உன் தொட்டில் பூமியென
யாழ் வண்ணார் பண்ணை அமைந்ததனால்
அது வரலாற்றுப் பூமியாக
வடிவம் கொண்டது.

247. நீ... கல்விக் கனியை
அருந்திய இடமாக
யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி
இந்துக் கல்லூரி இவைகள் ஆனதால்
இன உறவுகளின் இருப்பிடம் என்றே
இங்கு... நீ இனம்காணப்பட்டாய்.

248. வரலாற்றுத் துறையில்
சிறப்புப் பட்டதாரியாகிய நீ
உன் வாழ்வை
முஸ்லிம் சமூகம் மெச்சுகிற
வரலாறாகவே ஆக்கினாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

249. தன் கல்வியைத் தொடர
கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்தில்
காலடி பதித்திட்ட நீ
கல்வியின் பெருமைக்கும்
கருவாகவே கருதப்படுகிறாய்.

250. இலங்கை சிவில் சேவையை
அலங்கரித்த முதல் முஸ்லிம் என்ற
பெருமைக்கும் உரியாராய் உயர்வுற்றாய்.

251. கல்முனையின் அவசரகால
அதிகாரியாக அமர்ந்த நீ
அப்பதவிக்கு
அலங்காரமாகவே ஆனாய்.

252. இங்கு காடுகள் களனியானதும்
உணவின் களஞ்சியமாய்
ஊர் உயர்வுற்றதும்
உன் சரித்திரச் சுவடுகளாய் ஆகின.
எம்.சீ. சித்திலெப்பையின்
இலக்கியக் கருவூலங்களைப்
பேணிப் பாதுகாத்ததன் மூலம்
முஸ்லிம் தமிழ் இலக்கியத்தின்
முக்கிய நபராய்
முடிசூடிக்கொண்டாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

253. இந்தியத் தமிழகத்தில்
முஸ்லிம் கல்வி மாநாட்டை
அங்குரார்ப்பணம் செய்துவைத்த
சிறப்புக்குச் சொந்தமாகிப் போன நீ
பிறநாட்டின் கல்விக்கும்
கருவாகிப் போனாய்.

254. கல்விக்கு ஆற்றிய பணிக்காய்
தமிழக முஸ்லிம் கல்வி மாநாட்டின்
கௌரவிப்புக்கு
உரித்தாகிப் போன நீ
உன்னதங்களாலேயே
என்றும் ஆசீர்வதிக்கப்பட்டாய்.

255. இலங்கை முஸ்லிம் கல்விச்
சகாய நிதியத்தின்
ஸ்தாபகர் என்னும் புகழால்
பூசிக்கப்பட்ட நீ
இப்புனித காரியத்தின்
பாசறையாகவே பகரப்படுகிறாய்.

256. ஆசிரியர் சங்கத்தின்
தலைமைப் பதவி
உன்னில் தங்கிக் கொண்டதால்
அது தன்னை அலங்காரமாகவே
ஆக்கிக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

257. வியாபாரச் சமூகமென
வியாக்கியானம் பெற்ற முஸ்லிம் சமூகம்
உன்னால்...
கல்விச் சமூகமாயும்
கருக்கொண்டதுடன் உன் உரைகளில்த்தானே
முஸ்லிம்சமூக கல்வி நாகரிகம்
இந்நாட்டில் நடந்தது.

258. அமைதியை அதிகம் ஆசிக்கும் நீ
இன உறவுகளக்கும்
இலக்கணமாகவே இலங்கினாய்.

259. செந்தமிழின் செழுமைக்கு
உன் உழைப்புகள் யாவும்
உரமாகவே உருப்பெற்றது.

260. கறைபடியாக் கரத்தின்
காட்சியாகவே ...
காணப்பட்ட நீ
அறத்தினாலே என்றும் பூசிக்கப்பட்டாய்.

261. உன் வாழ்வை
நேர்மையின் வியாக்கியானமாய்
விளங்கச் செய்வதில்
மனிதம் மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

262. சுவாமி விபுலானந்தரின்
நட்புக்குரியாராய் நிலைகொண்ட நீ
அவர் பாடிய...
உத்தமனார் வேண்டுவது
உள்ளக் கமலமடி என்ற பாட்டிற்கும்
உயரிய பொருத்தமாகவே
உருக்கொண்டாய்.
உள்ளத்துத் தூய்மையின்
பாசறையாய்ப் பரிணமித்தாய்.

263. அன்று நீ
நிகழ்வுகளில் கலந்து கொள்வது கூட
அதற்கான அலங்காரமாகவே ஆகிப்போனது.
உன் உரை அங்கு
உயரிய அம்சமாகவே உணரப்பட்டது.

264. கூடியதாம் ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்கு
உரிமையாளனாகிய நீ
அறிஞனாகவே அறியப்பட்டாய்.

265. அறிஞர் அஸீஸே!
உன் ஆற்றலின் ஆளுமைக்குள்
முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றம் எல்லாம்
உள்ளடங்கிப் போனது.

266. அறிஞர் அஸீஸ் என்னும்
உன் நாமம்
எம் இன உயர்ச்சியின்
ஏணியாகவே ஏற்றம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

267. உன் வாழ்வை
இனத்தின் செழுமைக்கு
உரமாக்கிய... நீ
சமூகத்தின் வசந்தமாகவே
வாழ்த்துரைக்கப்படுகின்றாய்.

268. தீர்க்க தரிசனப் பார்வையின்
திருத்தளமாகிப் போன நீ
எம் இன உயர்ச்சியின்
படிக்கட்டாகவே
பரிமாணம் பெற்றாய்.

269. உன் சிந்தனைகள் யாவும்
முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றமாகவே
அறுவடையாகின.

270. அஸீஸ் என்னும் உன்பெயருடன்
அறிஞர் எனும் வார்த்தை
ஆகிப் போனதால்
அது தன்னை
அலங்காரம் ஆக்கிக் கொண்டது.

271. அறிஞர் அஸீஸே!
நீ... அறியாமைக் காரிருளில்
அறிவுச் சுடராய்ப்
பிரகாசித்த பேரொளியாகவே
புரியப்படுகின்றாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

272. அறியாமைப் பாலையில்
ஊற்றெடுத்தோடிய
அறிவின் நதியாகவே
ஆகிப் போனாய்.

273. நாட்டில்
முஸ்லிம் சமூகத்தின்
அறிவு ஞானமாகவும்
அறியப்படுகின்றாய்.

274. உன் சிந்தனைகளின்
பரப்பில்த் தானே
இந்நாட்டு முஸ்லிம்களின்
அறிவியல் அரங்கேற்றம்
அதிகம் ஆகிப்போனது.

275. என்றும் சத்தியத்தில்
சங்கமித்த நீ
யதார்த்தத்தின் எழிலுருவாகவுமே
எம்மால் உணரப்படுகின்றாய்.

276. போலித் தன்மைகளுக்கெல்லாம்
புதைகுழியாய் ஆகிப்போன
என்றும்... புனிதத்தின் பொக்கிசமாயும்
புரியப்பட்டாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

277. அறிஞர் அஸீஸே!
உன்னை உரைக்கும் போதெல்லாம்
அறிவை அடைந்து கொண்டதாகவே
அகமகிழ்வடைகிறோம்.

278. உன் சிந்தனைகள் யாவும்
முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றமாகவே
மிளிர்ந்ததால்... என்றும் நீ
சமூகத்தின் ஆசீர்வாதத்தால்
ஆராதிக்கப்பட்டாய்.

279. உன் காலநேரங்கள் யாவையும்
இனத்தின் உயர்ச்சிக்காகவே
உரித்தாக்கினாய்.

280. தூரப் பார்வையின்
துலக்க இடமாய்த்
துலங்கிப் போன நீ
சமூகத்தின் வருங்காலத்தையும்
வலியுறுத்தி நின்றாய்.

281. உன் உள்ளம்
சத்தியத்தின் சங்கமமாய் ஆகிப் போனதால்
உண்மைகளின் உறைவிடமாயும்
உயர்வுற்றுப் போனாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

282. இன்று எம் சமூகத்தில்
அஸீஸ் என்னும் உன் நாமம்
முஸ்லிம்களின் முன்னேற்றமாகவே
மொழியப்படுகின்றது.

283. எத்தகைய நிலைமைகளையும்
எதிர்கொள்ளும் ஆற்றல்
ஏராளம் கொண்டவனாக
ஏற்றமுற்றுப் போனாய்.

284. உன் இலட்சியத்தை
இல்லாமல் ஆக்க
வகித்த பதவிகளுக்கு
நீ... வாய்ப்பளித்ததே இல்லை.

285. அறிஞர் அஸீஸே!
நீ... வகித்த பதவிகள் எல்லாமும்
உன்னால் அலங்காரம் பெற்றவையாகவே
ஆகிப்போயின.

286. அஸீஸ் என்னும் உன்நாமம்
வருங்காலத்திலும்
வாழ்த்துலுக்குரியதாக
வளமுற்று ஓங்கும்.

287. பல நூற்றாண்டுகளுக்குப் பின்பும்
உன் பெயர்
பெருமையுறப் பேசப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

288. முஸ்லிம் சமூகத்தின்
முன்னேற்றப் பொழுதுகளில் எல்லாம்
அஸீஸ் எனும் உன்பெயர்
அழகுறப் போற்றப்படும்.

289. இனத்தின் உயர்வென்றே
உரித்தாகிப் போன நீ
காலமெல்லாம் கதைக்கப்படும் அளவுக்கு
கன புகழின் கருவாகிப் போனாய்.

290. அஸீஸ் என்னும் நாமத்தை
அகற்றிவிட்டு
முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றம் பற்றி
மொழியவே முடியாது என்ற அளவிற்கு
முக்கியத்துவம் பெற்றுவிட்டாய்.

291. அறிவால் ஆராதிக்கப்பட்ட நீ
அறியாமைகளின் புதைகுழியாயும்
புகழுற்றுப் போனாய்.

292. இந்நாட்டு முஸ்லிம் சமூகத்தின்
ஆசீர்வாதத்திற்கு அருகதையான நீ
என்றும்
எம் இனத்தின்
உயர்வாகவே உணரப்படுகின்றாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

293. முஸ்லிம் சமூகத்தின் கல்வி
அஸீஸ் எனும் நாமத்துக்குள்
அடங்கிப் போனதால்
இந்நாட்டில் உன் புகழ்
ஓங்கிக்கொண்டே இருக்கும்.

294. கல்விக்கோர் அஸீஸ் என்று
கதைக்கப்படும் அளவுக்கு
இன்று... நீ...
உயர்ச்சியின் உச்சத்தில் இருக்கின்றாய்.

295. இந்நாட்டில்
முஸ்லிம் சமூகத்தின் மேன்மை
அறிஞர் அஸீஸ் என்னும்
நாமத்துக்குள் அல்லவா
அடங்கிப் போனது.

296. சமூகத்தின் கல்விக் கண்ணைத்
திறந்த உன்னை
எதிர்கால சந்ததியினரும்
ஏற்றமுறப் போற்றுவர்.

297. நிர்வாகப் பணிகளை எல்லாம்
நிராகரித்துவிட்டு
இப்படியும் ஒருவர் கல்விப் பணியில்
கால் பதித்தாரா? என்று
அறிஞர் அஸீஸைப் பற்றி அறிபவர்கள்
அதிசயமுற்றுப் போவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

298. யாழ் பல்கலைக் கழகத்தின்
கௌரவ கலாநிதிப் பட்டம்
உனக்கு உரித்தாகிப் போனதால்
அப்பட்டத்திற்கு
நீ... அணியாகிப் போனாய்.

299. இலங்கை அரசு
உனக்கான தபால் முத்திரையை
வெளியிட்டதன் மூலம்
நீ...
தேசியத் தலைவராய் அல்லவா
முடிசூடிக் கொண்டாய்.

300. உலகம் வியக்கும்
உன்னத தலைவர்கள்
ஒருநூறு பேர்களில் ஒருவராக
உன்னையும் இந்தியப் புதுடெல்லி
குறிக்கோள் கல்வி நிலையம்
உள்வாங்கிக் கொண்டமை
உன் உயர்வின் உச்சத்தை
உரைக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

301. எகிப்து நாட்டிலிருந்து
நாடு கடத்தப்பட்ட
ஒராபி பாஷாவின் உன்னதத்தை
நீ உரைத்ததன் மூலம்
உன் உன்னதத்தை நாட்டில்
முஸ்லிம் சமூகத்திற்கு
உணர்த்திக் கொண்டாய்.

302. பாகிஸ்தான் தந்தை
முகம்மது ஜின்னாவின்
மாண்பதனை நாட்டில்
முஸ்லிம்களுக்கு உணர்த்தியதால்
அவர்கள் மத்தியில்
நீ... மாண்புக்குரியவனாய்
மதிக்கப்பட்டாய்.

303. அறிஞர் அஸீஸே!
நீ... கவிஞர் அல்லாமா இக்பாலின்
ஆழ்ந்த கவிக் கருத்தில்
மூழ்கிப் போனதனால்
உயரிய ஞானத்தின்
களஞ்சியமாகவே மாறினாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

304. கொழும்பு ஸாஹிறாவில்
கட்டடம் ஒன்றுக்கு
அல்லாமா இக்பாலின்
பெயரைச் சூட்டி
அவரைக் கண்ணியப்படுத்தினாய்.
அதனல்... நீயே
கண்ணியத்துக்குரியோனாய்க்
கருதப்பட்டாய்.

305. அறிஞர் அஸீஸே!
நீ கவி இக்பால் மீது
கொண்ட பாசமானது
நீ... ஈன்ற உன் மகனுக்கும்
இக்பால் என்ற நாமமாய்
இலங்கச் செய்துள்ளது.

306. கொழும்பு ஸாஹிறாவின்
அதிபர் என நீ அமர்ந்தபோதுதான்
அதன் கனத்தை
அனைவரும் அறிந்துகொள்ள முடிந்தது.

307. இலங்கையில்...
இலக்கியச் செம்மல்
எம்.சீ. சித்திலெப்பையின்
ஆக்கங்கள் அரங்கேறும்
முன்னோடியாகவும் நீ மிளிர்ந்தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

308. தமிழ் அறிஞர்களாய்ப் பரிணமித்த
சுவாமி விபுலானந்தர்
ஆறுமுக நாவலர் போன்றோரின்
புலமைகளைப் பறைசாற்றியதன் மூலம்
புலமையாளனாகவே
புகழ்ந்துரைக்கப்படுகின்றாய்.

309. பிற நாட்டுக்கான
உன் பயணங்களைக்
கட்டுரையாக்கியதன் மூலம்
நாட்டு மக்களையும்
அந்நாடுகளைத் தரிசித்த நிலைக்கு
உயர்ச்சியுறச் செய்தாய்.

310. பல்நூல் ஆசிரியர் என்ற
பரிமாணத்தின் சிகரத்தில்
சிம்மாசனம் இட்டிருந்தாய்.

311. மொழிபெயர்ப்புத் துறையிலும்
மூழ்கிப் போன நீ
பிறநாட்டு நல்லறிஞர் சாஸ்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டுமென்ற
தத்துவத்தின் சிகரத்தில் தவழ்ந்தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

312. உலகத்தமிழ் ஆராய்ச்சி
மாநாடுகளிலும்
கலந்துகொண்ட நீ
தமிழ்மொழியின்
தகுபேறாகவும் போற்றப்புடுகின்றாய்.

313. ஏற்றபெரும் எழுத்தாளன் என்ற
மகிமைக்கும்
மகுடமாகிப் போனாய்.

314. அன்று நீ
கல்முனையின் அவசரகால
அரசாங்க அதிபர் பதவியை
அணிசெய்த போதுதான்
அது...
உன் புலமையின் புலப்படுதலாகப் புலர்ந்தது.

315. காத்தநகர் கவிஞர்
அப்துல்காதர் லெப்பையின்
அருமைக்கும்
நீ... தானே
அடிப்படையாய் ஆகிப்போனாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

316. அறிஞர் அஸீஸே!
உன் அடி உளத்தில்
தமிழ் உணர்வுகள்
ஊற்றெடுத்தோடியது
உன் உன்னதத்தின் உயர்ச்சியாகவே
உணரப்படுகிறது.

317. உன் தமிழ் வார்த்தைகளில்
யாழ் மண்வாசனை
வீசிக்கொண்டே இருக்கின்றது.

318. தமிழ்கூறும் நல்லுலகம்
தமிழ் மொழி வளர்த்த உனக்கு
என்றும்
நன்றி மாலைகளைச்
சூட்டிக்கொண்டே இருக்கும்.

319. இலங்கை முஸ்லிம்களின் தாய்மொழி
தமிழ்மொழியே என்று
தாய்நாட்டில் மிளிரச்செய்த
தத்துவத்தின் தந்தையாகவும்
நீயேதான் உள்ளாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

320. சிங்களத்தை மட்டும்
அரசகரும மொழியாக்கும் திட்டத்தை
முற்றாகவே எதிர்த்த
மூலவராய் ஆன நீ
இதற்காக
செனட்சபை உறுப்பினர் பதவியையும்
தூக்கியே எறிந்தாய்.

321. முஸ்லிம் வாலிபர் இயக்கத்தை
இலங்கையில் உருவாக்கிய
உன்னதத்தின்...
ஊற்றாகவும் ஆகிப் போனாய்.

322. இலங்கை முஸ்லிம்கள்
இஸ்லாமிய ஞானத்தின்
இருப்பிடமாய் இலங்கிடவும்
இனியநெறி புகட்டி நின்றாய்.

323. திருமறையாம் குர்ஆனை
திறம்பட ஓதும் திறனால்
முஸ்லிம்கள் நாட்டில்
ஆராதிக்கப்படல் வேண்டும் என்றும்
அறிவுரை பகன்றாய்.

324. அருள்மறையாம்
குர்ஆனின் அறிவு ஞானத்தால்
முஸ்லிம்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருஷிக்கப்படல் வேண்டுமென்றும்
வழிபகன்று நின்றாய்.

325. நமக்கோர் ஜாமிஆ எனும்
கட்டுரையின் மூலம்
இலங்கையில் முஸ்லிம்களின்
சன்மார்க்க அறிவுக்கு
வாழ்த்துரைத்தாய்.

326. இஸ்லாமிய இலக்கியத்தில்
பேராசிரியர் உவைஸ்
கால் பதித்த பெருமைக்கு
நீ தானே!
கருவாகிப் போனாய்.

327. தன் முதுகலைமாணிப் பட்டத்தில்
முஸ்லிம்கள் தமிழுக்கு
ஆற்றிய தொண்டு பற்றி
ஆராயப் பேராசிரியர்
எம்.எம். உவைஸுக்கு
ஆலோசனை அளித்த புகழாரம்
உனக்கேதான் சூடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேறு

328. அஸீஸவரின் காவியத்தை அகமுவந்து படிக்கும்
அத்தனையாம் மாந்தர்களும் அதிசிறப்பாய் வாழி!
உசிதமென இனத்திற்கு உயர்சேவை செய்வோர்
உயர்வுற்று என்றென்றும் உவப்பினிலே வாழி!

329. உன்னதமாம் சேவைகளின் ஊற்றிடமாய் ஆன
உத்தமராம்அஸீஸவரின் உயர்நெறிகள் பற்றி
நன்றெனவே வாழ்ந்திடுவோர் நிலமீதில் வாழி!
நற்சேவை நாயர்அஸீஸ் நாமமதும் வாழி!

330. நாட்டினிலே முஸ்லிம்கள் நல்நிலையில் வாழ
நல்வழியாய் அஸீஸ்நெறிகள் நிலைத்தேதான் வாழி!
வாட்டமிகு முஸ்லிம்இனம் வளமுற்று வாழ
வாஞ்சையுடன் உழைப்போர்கள் வனப்புடனே வாழி!

331. இனநலனுக் குழைக்கின்ற இன்னரிய செயலின்
இஸ்லாத்தின் மாந்தர்கள் இனிதோங்கி வாழி!
கனமான பணிசெய்யும் காத்திரமாம் உள்ளம்
கொண்டவராய் அன்னோர்கள் குவலயத்தில் வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

332. நல்லபெரும் சிந்தனையில் நிலைத்திட்ட அஸீஸை
நாட்டினிலே நவில்வோரும் நன்றெனவே வாழி!
நல்லவராம் அன்னவரை நன்கேதான் நினைப்போர்
நிலமீதில் என்றென்றும் நன்குயர்ந்து வாழி!

333. ஆனபணி அத்தனையும் அழகுறவே ஆற்றும்
அஸிஸ்மன்றம் அவனியிலே அதிசிறப்பாய் வாழி!
தானவனின் கிருபையுடன் தானவர்கள் வாழி!
தரமான பணிசெய்து தரைமீதில் வாழி!

334. அஸீஸவரின் காவியத்தை ஆக்கிட்ட அனஸும்
ஆயுளுடன் ஆரோக்கியம் அடைந்தவராய் வாழி!
உசிதமிகு தன்மையெலாம் உயர்வுறவே பெற்று
உலகினிலே என்றென்றும் உன்னதமாய் வாழி!

335. ஆனபெரும் உறவென்று அஸீஸவர்க்கு ஆன
அத்தனையாம் நபர்களுமே அகிலத்தில் வாழி!
தானவனின் அருள்பெற்றுத் தரமாக வாழி!
தக்கபுகழ் பெற்றேதான் தரைமீதில் வாழி!

336. மண்ணறையில் அஸீஸவரும் மாண்பாக வாழி
மாஇறையின் அருள்பெற்று மகிமையுடன் வாழி!
கண்மணியாம் நாயகத்தின் கடும்வாஞ்சை கண்ட
கர்த்தாவாய் அவர்நன்கு வாழியவே! வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Dr. A.M.A. Azeez Foundation

## Member of the Executive Committee

Mr. Khalid M. Farouk J.P. - President

Mr. M.S. Raheem J.P. - Secretary

Mr. Ali Azeez B.Sc., FCA - Treasurer

Mr. P.Balasingham B.A. (Cey)

Mr. M.F.S. Muheed

Mr. A.M. Nahiya B.A. (Cey), P.G.D.E.(Jaffna), M.Phil in Ed. (Jaffna) C.G.Mgt.

Mr. M,N.M. Naphiel J.P

Mr. Saheed M. Rismy J.P - MBA-KH, PGD(IBF)-UK , PGD(IB&Mgt)-SL, DIBF(ABP)-UK,DIBM-SL,DIBA-SL

## Dr. A.M.A. Azeez Foundation

## List of Publications

2007 - A.M.A. AZEEZ-A PROFILE

2008 - A.M.A. AZEEZ - SENATE SPEECHES

2009 - A.M.A. AZEEZ - MUSLIM EDUCATION IN SRI LANKA

2009 - அறிஞர் எ.எம்.எ. அஸீஸ் - பன்முகப்பார்வை

2010 - ඒ.එම්.ඒ අසීස් - චරිත සටහනක්

2011 - THE WEST REAPPRAISED(Re- Pubished)

2012 - அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ் (விரிவாக்கிய மீள் பதிப்பு)

2012 - அறபுத் தமிழ் - ஒரு மீள்பார்வை

2013 - A.M.A.AZEEZ - EARLY LIFE AND TRIBUTES

2014 - ONE DISTINGUTSHED FAMILY OF MOOR STREET JAFFNA

2014 - அறிவோம் பார்வையில் கலாநிதி எ.எம்.எ அஸீஸ்

2015 - A.M.A.AZEEZ -MILESTONES TO REMEMBER

2015 - ISLAMIC BANKING - AN ALTERNATE APPROACH TO FINANCE

2017 - அஸீஸும் தமிழும்

2018 - A.M.A.AZEEZ - SPEECHES AND TRIBUTES

2024 -அறிஞர் அஸீஸ் அகம் நிறை காவியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காப்பியக் கதிரோன் முகம்மது முகைதீன் அப்துல் அனஸ் அவர்கள் இலங்கை துறைமுக அதிகார சபையில் திருகோணமலைக்கான தொழில் உறவு அதிகாரியாக கடமையாற்றி ஓய்வு பெற்றவர்.

மூதூரில் புலவர் பரம்பரையில் புலவர் சாலயர் (முகையத்தீன்), புலவர் உமர் நெய்னார், கவிஞர் கலாபூசணம் எம்.ஏ.பரீது எனத் தொடரும் குடும்ப பரம்பரைவழியில் தோன்றிய கவிஞர் அனஸ் ஆவார்.

இவருடைய காவியத் திறனை கருத்தில் கொண்டு திருகோணமலை தமிழ்ச்சங்கம் "காப்பிய கதிரோன்" என்னும் பட்டத்தை இவருக்கு வழங்கியது.

முகையத்தீன் அப்துல் அனஸ் அவர்கள் 85 நூல்களை இன்றுவரை வெளியிட்டுள்ளார். காவியம், வெண்பா, நன்நெறிக்குறள், எண்சீர் விருத்தங்கள், அகவல், புதுக்கவிதைகள் எனப் பல்வேறு இலக்கிய வடிவங்களில் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு பெரும் பணி செய்து வருகின்றார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் வழிகாட்டலில் உருவாகிய ஒரு மக்கள் சேவகனுமாவார்.

Dr. A.M.A. Azeez Foundation
97/1, Galle Road, Dehiwela
Tel: 2733251 I 4910826
web: www.azeezfoudation.com

ISBN 978-955-7931-04-3

9 789557 931043

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org